Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...
C/638
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 17 | சனிக்கிழமை (30.04.2011) | பக்கங்கள் 12 | ஓசை - 213



## யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் சிலர் நேற்று திடீர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தைத் தொடர்ந்து மாணவர் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன. இதுதொடர்பில் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் துணைவேந்தர், பீடாதி பதிகள் மற்றும் ஒழுக்காற்று அதிகாரிகள் முன்னிலையில் மாணவர்பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் உரிய முன்னறிவித்தல் இன்றி பல்கலைக்கழக சட்டதிட்டங்களுக்கு முரணான வித்தில் மறியலில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமென்பது எடுத்துரைக்கப்பட்டது. பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு தடைகளை ஏற்படுத்தியிருந்தமை மிகவும் (11ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் அரசியல் உரிமை குறித்து அரசுடன் ஈ.பி.டி.பி. பேச்சுவார்த்தை

### அபிவிருத்தியுடன் அதிகாரப்பகிர்வை நோக்கிய பயணம்

(கொழும்பு)

வடக்கு கிழக்குத் தமிழ்மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை குறித்தும், இப்பிரச்சினைக்கான கௌரவம் மிக்க தீர்வை நிரந்தரமாக எட்டிக்கொள்வது எப்படி என்பது குறித்தும் அரசுக்கும் ஈழமக்கள ஜனநாயகக் கட்சிக்குமிடையில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன. கொழும்பில் நேற்றுமாலை ஆரம்பமாகிய மேற்படி முதலாம் கட்ட அரசியல் பேச்சுக்களின்போது இருதரப்பும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்து ஆராய்ந்தனர். (12ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைமீது பனிப்போர்; மேற்குலகம் ஆரம்பித்துள்ளது

### தயான் ஜயதிலக எச்சரிக்கை மணி அடிக்கிறார்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான பனிப்போர் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரானுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

தமிழீழத்தை மாற்று வழியில் அடைவதற்காக இந்தப் பனிப்போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் ஆதரவாளர்களும், செயற்பாட்டாளர்களும் மாதிரி நிர்வாகம் ஒன்றை அமைத்து, அதன் மூலம் தமிழீழ இலக்கை அடைய முயற்சிப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிடுவதை ஒத்தி வைக்குமாறு (11ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குலக நாடுகளின் தேவைக்காக நிபுணர்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது

(கொழும்பு)

மேற்குலக காலனித்துவ ஆட்சியாளர்கள், புலம்பெயர் தமிழ் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பதவியை வகிக்கும் பான் கீ மூன் அந்தப் பதவிக்கு பெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கை கபடமான முறையில் தயாரிக்கப்பட்ட ஓர் (11ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நெறிமுறை; உள்நாட்டு விசாரணை

### தேசிய சமாதானப் பேரவையின் கோரிக்கை

(கொழும்பு)


இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் அரசாங்கம் சர்வதேச தரத்திலான விசாரணைகளை நடத்த வேண்டுமென தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு பரிந்துரைகளுக்கு நிகரான வகையில் சர்வதேச தரத்திலான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது. இந்த விசாரணை (12ஆம் பக்கம் பார்க்க)

## மாறிவரும் சமகால அரசியல் போக்கு; இந்தியத்தூதுவருடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சு



(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய சமகால அரசியல் சூழல் குறித்தும், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான விடயங்கள் தமிழ் மக்களின் அரசியலில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியத் தூதுவருடன் விரிவான பேச்சுக்களை நடாத்தியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



மெய்ப்பொருள் - சமத்துவம் - சகோதரத்துவம்

# போக்குவரத்து ஒழுங்குவிதிகளை மீறுவோருக்கு

# இரண்டு இலட்சம் அபராதம் விதிக்க வேண்டும்

வீதி போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் சட்டவிதிமுறையினை மீறி செயற்படும் தனியார் பேரூந்து சாரதிகளிடம் அறவிடப்பட்டு வந்த அபராத தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 10 ஆயிரம் ரூபாவாக அறவிடப்பட்டு வந்த அபராத தொகை, இனிவரும் நாட்களில் இரண்டு இலட்சமாக அதிகரிக்க போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கான யோசனை வரைவுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக தனியார் போக்குவரத்துறை அமைச்சர் சீ.பீ.ரத்ணாயக தெரிவித்தார். இதனை அதிகரிப்பதன் மூலம் வீதி ஒழுங்குகள் மீறப்படும் செயல்கள் குறைவடைவதுடன், வீதி விபத்துக்களும் குறைவடையும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதனை தவிர குறித்த பேரூந்து கட்டணங்களுக்கு மேலதிகமாக பணம் அறவிடும் பேரூந்துகள் தொடர்பில் போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு முறையிடுமாறும் அமைச்சர் சீ.பீரத்ணாயக குறிப்பிட்டுள்ளார்.



# நட்புறவுச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேபாளம், பின்லாந்து ஆகிய இடங்களைச் சேர்ந்த இளைஞர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ்.குடா நாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

நேபாளத்தைச் சேர்ந்த பத்துப் பேரும், பின்லாந்துச் சேர்ந்த இரண்டு பேரும் கொழும்பு இளைஞர்கள் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கலாக 17பேர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பு வந்துசேர்ந்து காலை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர். இரண்டு நாட்கள் யாழ்.குடா நாட்டிற்கு விஜயம் செய்துள்ள இக்குழுவினர், நேற்று யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்து அங்கு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கத்தைச் சந்தித்து யுத்தத்திற்குப் பிந்திய யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகள், மீள்குடியமர்வு, நீர் விநியோகம், வீடமைப்பு போன்ற பணிகளைக் கேட்டறிந்து கொண டனர்

அத்துடன் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கும் விஜயம் செய்த குழுவினர் மாலை காரைநகர் கசூரினா கடற்கரைக்கும் விஜயம் செய்தனர்.

இக் குழுவினர் இன்று யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிய வருகிறது. (பா)

# பின்லாந்து தூதுவர் கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

இலங்கை மற்றும் இந்தியாவிற்கான பின்லாந்துத் தூதுவர் ரொகி ஹகலா (Terhi Hakala) கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற சந்திப்பில் தூதுவர் கலந்துகொண்டதுடன், கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஐரோப்பிய ஒன்றியத்துடனான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக் அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன், திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் உள்ள அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் உட்கட்டுமான அபிவிருத்திக்கான குடிநீர், வீதி, நீர்ப்பாசனம், உள்ளிட்ட வேலைத்திட்டங்களுக்கான உதவிகள் தொடர்பாக கலந்துரையாடுவதாகத் தூதுவர் இதன் போது தெரிவித்தார். (29)

# போட்டியில் முதலிடம்

(வடமராட்சி)

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற 2010ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவப் போட்டியில் வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலகம் முதலாமிடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 15 இற்கு மேற்பட்ட பிரதேச செயலகங்கள் பங்குபற்றியிருந்தன இதில் இரண்டாம் இடத்தைச் சங்கானைப் பிரதேச செயலகமும், மூன்றாம் இடத்தை தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் பெற்றுக்கொண்டது. (100)

# பன்னிண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காயம் பயிரிட நடவடிக்கை

உள்நாட்டில் 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காயம் பயிரிடப்படவுள்ளதாக மாத்தளை மாவட்ட விவசாயத் திணைக்கள அத்தியட்சகர் பிரசன்ன பல்லேமுல்ல தெரிவித்துள்ளார்.

தற்போது உள்நாட்டில் 6000 ஏக்கரில் பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் 2013ம் ஆண்டு அளவில் இது இரட்டிப்பாகலாமெனவும் அவர் தெரிவித்தார்.

பெரிய வெங்காயம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் வருடாந்தம் பெருந்தொகையான நிதி எமது நாட்டிலிருந்து அந்நிய நாட்டுக்குச் செல்வதாகவும் இதனை தடுக்கும் நோக்கிலேயே 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யவுள்ளதாகவும் முதற்கட்டமாக மத்திய மாகாணத்திற்கு 3500 கிலோ விதை பெரிய வெங்காயம் வழங்கப்படவுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

# கைதிகள் தப்பியோட்டம்

திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து கைதிகள் தப்பியோடியமை தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அறிக்கை கோரியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக திருகோணமலை சிறைச்சாலையின் பிரதம அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

# வடமராட்சியில் மகேஸ்வரி நிதியத்தின் புதிய கிளை திறப்பு

மகேஸ்வரி நிதியத்தின் கிளை அலுவலகம் வடமராட்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதி நெல்லியடியில் இந்த கிளைக் காரியாலயம் நேற்று திறந்து வைக்கபட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகுப்பிள்ளை சிறிபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை அமரர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் அவர்களின் சகோதரி கமலேஸ்வரி சாந்தகுமார் ஏற்றிவைக்க இந்த புதிய கிளைக் காரியாலயத்தை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பேராசிரியரும் விரிவுரையாள ருமான திலகேஸ்வரி குமுதரஞ் சன் அவர்கள் நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்த கிளையின் ஊடாக கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச மக்கள் மக்கள் மணல் பெறுவதற்கான பதிவினை மேற்கொள்ள முடியும் மகேஸ்வரி நிதியம் தெரிவித்துள்ளது.

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சிலாவத்துறை - முத்தரிப்புத் துறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ்மில்லர் என்பவருடைய 'மணிப்பேர்ஸ்' ஒன்று J/89 பிரிவு கிராமசேவையாளராகக் கடமையாற்றும் ம.ஞானேந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ஊடாக தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் கே.கே.எஸ். வீதியில் உள்ள தினமுரசு விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரத்தில் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இரு மோட்டார் சைக்கிளிலும் வந்தவர்கள் காயமடைந்துள்ளனர். காஞ்சனா தேவி (வயது - 37) சுப்பிரமணியம் வீதி, அரியாலை, கே.விஜயகாந் (வயது - 32), சங்கிலியன வீதி, நல்லூர் ஆகியோரே காயமடைந்தவர்களாவார். இவர்கள் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (கா)

# மாதாந்தக் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் உள்ள முதியோர் சங்கங்களினதும், மாற்று வலுவுடையோரின் சங்கங்களினதும் மாதாந்தக் கூட்டம் இன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் முதியோர் சங்கங்களினது கூட்டம் காலை 9 மணிக்கும், மாற்று வலுவுடையோரது கூட்டம் காலை 10 மணிக்கும் இடம்பெறும்.

இந்த கூட்டத்தில் முதியோர்களுக்குப் பயிற்சிப் பட்டறை ஒன்றினை நடத்துவது பற்றிக் கலந்தாலோசிக்கப்படவுள்ளதால் அனைத்துச் சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (104)

# தேர் திருவிழா

சுன்னாகம் அருள்மிகு கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 01.05.2011 ஞாயிற்றுக் கிழமையன்று காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழா நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது. இத் தேர்த்திருவிழா அன்று "தேர்த் திருவிழா மகத்துவம்" எனும் தலைப்பில் ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (60)

# இரதோற்சவம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை - கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதில் இன்று மாலை வேட்டைத்திருவிழாவும் நாளை சப்பறத்திருவிழாவும் எதிர்வரும் 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (104)

# பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாந்தை கிழக்குப் பிரதேசபைக்குப் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கான பதவியேற்பு நிகழ்வு நேற்று மாந்தை கிழக்குப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மூன்று உறுப்பினர்களும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆறு உறுப்பினர்களும் தங்கள் பதவிகளைப பொறுப்பேற்றுக்கொண்டனர். (110)

# தெரிவுப் பரீட்சை

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்கள் அல்லாத ஆசிரியர்களில் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ்.வலயக்கல்வி அலுவலகத்திற்கு அண்மையிலுள்ள ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைத்தவர்களும், கிடைக்காதவர்களும் மற்றும் விண்ணப்பிககாதவர்களும் கலந்துகொள்ளலாம என அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# ஒன்றுகூடல்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மாணவர் மன்ற ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (100)

# ஆலோசனைக் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச மக்களின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக புதிய துணை வேந்தரைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் மற்றும் கல்விமான்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (11)

# வீதி சுத்தம் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்திலுள்ள முஸ்லிம் கல்லூரி வீதி, ஜின்னா வீதி, காமால் வீதி, காதி அபூபக்கா ஆகிய வீதிகள் சுத்தம் செய்யப்பட்டன.

நேற்று மாநகரசபை உறுப்பினர்களான எம்முஸ்தபா, அ.அஸ்ஹார், அஸ்ஹாருமி ஆகியோர இணைந்து மாநகரசபை ஊழியர்களின் பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்டன. நீண்டகாலமாக இவ் வீதிகள் மரங்களும் கொடிகளும் வளர்ந்து காடாகக் காட்சியளித்திருந்தன. அதேநேரம் இவ்வீதிகள் எல்லாம் குழியும் பள்ள முகமாகக் காணப்படுவதினால் இவற்றையும் செப்பனிட்டு தரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (19)

கங்கை நீர் சிறந்தது. அதனிலும் சிறந்தது அபிஷேக நீர். ஏழைகளுக்காக உழைக்கும் ஓர் உத்தமனின் முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர் அதனிலும் சிறந்தது.

-வாரியார் சுவாமிகள்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# மனவலிமை வேண்டும்!

யாழ்.மாவட்டத்தில் தற்கொலைகளும், வீதி விபத்துக்களும், சிறுவர் துஷ்பிரயோகங்களும், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகளும் பெருமளவு அதிகரித்து வருவதாகப் புள்ளி விபரங்களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாண்டின் கடந்த நான்குமாத காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 45 தற்கொலைச் சம்பவங்களும், 17 விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவற்றைவிட கடந்த மார்ச் மாதம் மட்டும் 15 சிறுவர் துஷ்பிரயோகமும் இடம்பெற்றுள்ளது.

யுத்தத்தின் கோரச்சுமைகளைத் தாங்கியுள்ள யாழ்.குடாநாட்டு மக்கள் பல்வேறு விதமான அழுத்தங்களுக்குள் சிக்கித் தத்தளித்து, அவற்றில் இருந்து மீளமுடியாத சந்தர்ப்பங்களில் இவ்வாறான தற்கொலை முயற்சிகளுக்குத் தள்ளப்பட்டு வருகின்றார்கள்.

போதியளவு மனவலிமையும், தம் மீதான நம்பிக்கையீனமுமே தற்கொலைகளுக்குக் காரணம் என உளவியல் வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றார்கள். உண்மையும் அதுதான்.

ஒருவருக்குத் தன்மீது நம்பிக்கையீனம் ஏற்படும் போது பிறரில் தங்கிவாழ வேண்டிய நிலை உருவாகும். அதனால் மனவலிமையை இழந்து விடுகிறார்கள். இந்நிலையில் அவர்கள் வாழ்வா? சாவா என்ற தீர்மானத்துக்கு வருகிறார்கள்.

மனவடுக்களுக்கும், உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளாகுபவர்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கும்போது ஏற்படும் விரக்தி நிலையில் தற்கொலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

இத்தகையவர்களின் விரகத்தி நிலையைப் போக்கி அவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்கு சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் முயற்சிக்க வேண்டும்.

தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுபவர்களின் மனோநிலையைப் பாதிக்கும் காரணங்களை முதலில் நாம் கண்டுபிடிக்க வேண்டும். அக்காரணங்களில் இருந்து அவர்களை விடுவிக்க சமூக அமைப்புக்கள் மத ஸ்தாபனங்கள் கூடியளவு பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.

குடும்ப நிலையில் இதனை நோக்குவதானால் அதிகளவு வசதிகளும், வாய்ப்புகளும் இருந்தும் பெற்றோர்களின் கண்டிப்பும், அரவணைப்பு இன்மையும் இவர்களை நெறிபிறழ வைப்பதாக சான்றோர்கள் கூறுகின்றார்கள்.

கல்வி, ஒழுக்கம், கலாசார விழுமியங்களைக் கொண்ட யாழ்ப்பாண மக்கள் சமூகம், இன்று கலாசார சீரழிவுகளுடன் சமூகப் பெறுமானங்களை இழந்து போலியான வாழ்க்கைக்குள் தள்ளப்படும் போது, தம்மைத் தாமே இழக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதிலிருந்து இவர்களைவிடுபடச் செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அமைதியின்மை, மனஉளைச்சல் என்பவற்றினால் ஏற்படக்கூடிய விரக்தி நிலையிலிருந்து இளையோரைக் காப்பாற்றுவதற்கான உபாயங்களைத் தேடிக் கண்டு பிடித்து அவற்றுக்கான தீர்வினைக் காணும் போது அவர்கள் எடுக்கும் எத்தகைய முடிவுகளில் இருந்தும் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

வீதி விபத்துக்களைப் பொறுத்தமட்டில் அது விபத்துத்தான். விபத்துக்கள் எதுவும் வேண்டும் என்றே நிகழ்வதில்லை. வாகனங்களைச் செலுத்துபவர்களின் மனோநிலையைப் பொறுத்துத்தான் அவை நடைபெறுகின்றன. அப்படிநட, இப்படிநட என்று எப்படித்தான் இடித்துரைத்தாலும் செவிமடுப்பதற்கு எவரும் தயாராக இல்லை.

இந்நிலையில் எது எப்படி நடந்தாலும் அவற்றுக்கு நாம்தானே பொறுப்பாக இருக்கிறோம் என்ற உணர்வுடன் நடந்து கொள்வோமேயானால், எதனையும் அனுசரித்துப்போகும் மனவலிமையைப் பெற்றவர்கள் ஆவோம்.

-ஆசிரியர்-

# பச்சிலைப்பள்ளியில் 16குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் நேற்றுமுன்தினம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். கச்சார்வெளி, அல்லிப்பளை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச சேர்ந்தோரே மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இருந்து அழைத்துவரப்பட்டு புலோப்பளை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

பிரதேச செயலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற மீள்குடியேற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், மீள்குடியேறும் மக்களுக்கான கூரைத்தகடு, மீள்குடியேற்ற நிதியுதவி, விவசாய உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் ஆகிய உதவிகளை வழங்கிச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலர், பளைப் பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலர், பளைப பிரதேச இராணுவ அதிகாரி பிரிகேடியர் பெரேரா, கிராம அலுவலர்கள், கூட்டுறவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த அணியுடன் நலன்புரி முகாம்களில் இருந்த பளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதேச செயலர் முகுந்தன் தெரிவித்தார்.

# போராட்டத்தின் தோல்வி மக்களை அரசியல் வனாந்தரத்தினுள் தள்ளிவிட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை மூன்று தசாப்தங்களாக அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் அகதி வாழ்வுகளுக்கும் உள்ளாக்கி வந்த கொடிய யுத்தம் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. யுத்தத்தின் கோர முடிவும், தமிழ் மக்கள் நம்பி நின்ற போராட்டத்தின் தோல்வியும் மக்களை அரசியல் வனாந்தரத்திலும், பாரிய விரக்திக்கும் இட்டுச் சென்றுள்ளது என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி விடுத்துள்ள மே தினம் பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலிலேயே தொழிலாளி வர்க்கத்தின் உரிமைப் போராட்ட தினமான 125 ஆவது மே தினம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இத்தினத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் சார்பான கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம்-கொழும்பு-அட்டன்-வவுனியா ஆகிய பிரதேசங்களில் மேதினக் கூட்டங்களை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# தொடர்சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

உற்சவ காலங்களில் தொடர் தெய்வீகப் பேருரையினைத் தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணி வரை ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி.காரை எம்.பி அருளானந்தன் நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது. (60)

# மீள்குடியேறி ஒரு வருடமாகியும் 25 ஆயிரம் ரூபா கிடைக்கவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு நிக்கொட் நிறுவனத்தினால் வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு 60 வீதமான மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச மக்கள் தாங்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடகாலம் கடந்த பின்பும் இந்தக் கொடுப்பனவு தமக்குக் கிடைக்கவில்லை என அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை,

மீள்குடியமர்ந்த மக்களுக்கு பல நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆரம்பகட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா 60 வீதமான மக்களுக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து மீளகுடியேற்றக் கொடுப்பனவை தமகது வழங்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

# சிறுவர் மீதான குற்றச் செயலைத்தடுக்க பாதுகாப்புக் குழுவொன்று நியமனம்

(கொழும்பு)

சிறுவர் மீதான பல்வேறு குற்றச் செயல்களை நிறுத்தி அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க கூறியுள்ளார்.

இந்தக் குழுவினர் எதிர்காலத்தில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அனைத்து அமைப்புக்களையும் ஒன்று கூட்டி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அண்மையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தது

சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கை சிறுவர்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அனைத்து அமைப்புக்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு குறித்த அமைப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இதன் போது விரிவாக ஆராயப்பட்டதாகவும் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க கூறியுள்ளார்.

# தொடருகின்ற பெரும் மழையினால் குளப்புனரமைப்பு வேலைகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் குளங்களை புனரமைக்கும் பணிகள், பெய்து வரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரமந்தனாறு, அக்கராயன் உள்ளிட்ட சில குளங்களின் அபிவிருத்தி வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில், கடும் மழையினால் புனரமைப்பு வேலைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதைவிட, இந்த மழையினால் இம்மாவட்டத்திலுள்ள ஏனைய குளங்களின் நீர்மட்டம் சற்று உயர்ந்துள்ளது. அத்துடன் இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 30 அடி 4 அங்குலம் வரை உயர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (28)

# சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சட்ட நடவடிக்கைகள் மூலம் தடுக்க முடியாது

## மனித உரிமை ஆணைக்குழு யாழ். இணைப்பாளர் கனகராஜ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பன அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறதென்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்இணைப்பதிகாரி எஸ்.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்:

யாழ்.குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகளில், பெருமளவானவை சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் போன்றவைகளே இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படும் போதெல்லாம் பெருமளவில் பாதிக்கப்படுபவர் சிறுவர்களும், பெண்களுமேயாவர்.

இவர்கள் பாதிக்கப்படுவதை சட்டத்தினால் மட்டுமே கட்டுப்படுத்த முடியாதென்பதை அனைவரும் அறிவர்.

இவற்றை நாம் கட்டுப்படுத்த வேண்டுமெனில் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்த விழிப்புணர்வின் மூலம், சிறுவர்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அவர்களை எமது சமூகத்தின் ஓர் அங்கமாகக் கருதி உளரீதியாக மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கெதிரான வன்முறைகளை நாம் அடியோடு களைய வேண்டுமானால், இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாமல் அவர்களைச் சார்ந்தவர்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இதன்மூலம் அவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதை ஓரளவுக்குத் தடுக்க முடியும் என்றார். (கா)



படம்: தமிழ்வாணன்

அண்மையில் வெளியாகிய க.பொ.த(சா/த)பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை இன்றித் தோற்றி பரீட்சைப் பெறுபேறு இதுவரை கிடைக்காத மாணவர்கள் குறித்து அடையாள ஆவணத்தை உறுதிப்படுத்தும் விசாரணையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பரீட்சைத்திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# சொந்தக் காணிகள் இல்லாத மக்கள் அடிப்படை வசதிகள் பெறுவதில் சிரமம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பன்னங்கண்டி கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தங்களுக்கான அடிப்படை வசதிகள் கிடைப்பதில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் சுமார் 328 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ள போதிலும், இவர்களில் 47 குடும்பங்கள் மட்டுமே சொந்தக்காணிகளில் வாழ்ந்து வருவதாகவும் ஏனைய 281 குடும்பங்களும் சொந்தக் காணிகள் இல்லாததால் இவர்களுக்கான வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை காணப்படுவதாக அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதில் நிரந்தரக் காணிகளை உடைய 47 குடும்பங்களில் 16 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் கிடைத்துள்ளதாகவும் ஏனையவர்களுக்கு இந்த வசதிகள் கிடைக்கவில்லை எனவும், இதனால் இந்த மக்கள் தற்காலிக வீடுகளை அமைத்து வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணி அற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கும், வீட்டுத்திட்ட வசதிகள் கிடைக்காத மக்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என கிராம மட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றன. (110)

# கரைச்சியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்படுகின்றன

(வட்டக்கச்சி)

நலன்புரி நிலையங்களில் இருந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கரைச்சிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம மக்களுக்கு தற்போது கூரைத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட கரைச்சி கிழக்குப் பிரதேசங்களான சுவிட்சென்ரர், வட்டக்கச்சி, மாயவனூர் மாவடி அம்மன், இராமநாதபுரம் ஆகிய கிராம சேவையாளர் அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டு வருகின்றன.

மீள்குடியேறி 9 மாதங்கள் கடந்த நிலையில் தற்போதே இக் கூரைத்தகடுகள் வழங்கப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சீமெந்தும், மள்குடியமர்வுக் கொடுப்பனவான மிகுதி 25 ஆயிரம் ரூபாவும் இது வரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (45)

# இரவில் தண்ணீர் தடைப்படுவதால் விடுதி நோயாளர்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரவு வேளைகளில் தண்ணீர் தடைப்படுவதால் விடுதிகளில் இருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விடுதி நோயாளர்கள் பல தடவைகள் வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்தபோதிலும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வைத்தியசாலைக்கு நீர் எடுக்க வருபவர்கள் நீர்க் குழாய்களை உடைப்பதாலேயே அவசர கூடத்திற்கான நீர் விநியோகம் தடைப்படுவதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதற்கான காரணங்கள் சுட்டிக்காட்டப் படுகின்ற போதிலும், இரவு வேளைகளில் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் தண்ணீர் தடைப்படுவதால் சில தேவைகளுக்கு கடதாசியைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் கவனம் எடுத்து தண்ணீர் தடைப்படாமல் அவற்றைச் சீராக வழங்குவதற்கு நடவடிககை எடுக்க வேண்டுமென விடுதி நோயாளர்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (02)



# கருப்பை நோயியல் ③

## வைத்திய கலாநிதி யமுனானந்தாவின் கேள்வி - பதில்

கேள்வி:- கருப்பையில் பொதுவாக நோய்நிலைகள் எந்த வயதில் ஏற்படலாம்?

பதில். 40 வயதிற்குப் பின்

கேள்வி: 40 வயதிற்குப் பின் பெண்களுக்கு ஏற்படும் மாதவிலக்குடன் தொடர்புடைய நோய் நிலைகள் எவை?

பதில்: மிகவும் அதிகமாக குருதிவெளியேறுதல், கருப்பைக் கட்டிகள், மாதவிலக்குடன் தொடர்பான கடுமையான நோ, கருப்பை அகவணி வேறு இடங்களில் காணப்படல், கருப்பை வெளித்தள்ளல், கருப்பைப் புற்றுநோய்.

கேள்வி: மேற்கூறிய நோய் நிலைகளுக்கு சத்திரசிகிச்சை முறைமூலம் அல்லாது அளிக்கக் கூடிய சிகிச்சை முறைகள் யாவை?

பதில்: அதிக குருதிப் பெருக்கைக் கட்டுப்படுத்த குளிசைகள் அல்லது ஊசி மூலம் மருந்துகள் அளிக்கலாம். கருப்பையினுள் ஓமோன்கள் புறத்துறிஞ்சப்பட்ட லூப்பிளை வைக்கலாம். மிக அண்மையில் கருப்பை அகவணியினை மட்டும் அகற்றும் முறைகளும் நடைமுறையில் உள்ளன.

கேள்வி: கருப்பையினை சத்திரசிகிச்சை மூலம் அகற்றுவதைக் குறித்து?

பதில்: வைத்தியநிபுணர் நடைமுறையில் உள்ள தீர்வுகளைக் கூறுவார். ஒவ்வொரு தாய்மாருமே தங்களது தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.

கேள்வி: கருப்பைச் சத்திரசிகிச்சையில் உள்ள வழிவகைகள் யாவை?

பதில்:வயிற்றுப் பகுதியினூடாகச் செய்யப்படும் சத்திரசிகிச்சை, லப்பரஸ் கோப் உதவியுடன் செய்யப்படும். பெரும்பாலும் குருதிப் பெருக்கிற்கு சத்திரசிகிச்சை செய்யும் போது கருப்பைக் கழுத்துப் பகுதி தவிர்க்கப்படுகின்றது.

கேள்வி: கருப்பையினை சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றும் போது சூலகத்தினையும் அகற்றல் அவசியமா?

பதில்: சாதாரணமாக மாத




விடாய் 51 வயதளவில் நின்று விடும். எனவே இவ்வயதை அண்மிப்பவர்களில் சூலகத்தினையும் அகற்றல் நன்று. இதனால் ஆயுட்காலம் 2-3 வருடங்கள் குறைவடைவதைத் தடுக்கலாம். இதன்பின் ஓமோன் மாற்றீடுகள் செய்யப்படல் வேண்டும்.

கேள்வி: மேற்கூறிய சந்தர்ப்பத்தில் சூலகத்தினை அகற்றுவதால் ஏற்படும் நன்மை?

பதில: சூலகத்தில் புற்றுநோய் ஏற்படுவது தவிர்க்கப்படும். வயிற்றில் ஏற்படும் அசாதாரண நோ தவிர்க்கப்படும்.

கேள்வி: சத்திரசிகிச்சையின் பின் ஏற்படும் பிரச்சினைகள் யாவை?

பதில்: சத்திரசிகிச்சையின் போது குருதிப்பெருக்கு ஏற்படலாம். நீண்ட நாட்களின் பின் நிறுநீர் கழித்தலில் பிரச்சினைகள், மலச்சிக்கல், கேணியா என்பன ஏற்படலாம்.

கேள்வி: சத்திரசிகிச்சையின் பின் அவதானமாக இருக்க வேண்டியவை யாவை?

பதில்: கிருமித்தொற்றுதலுக்கு இடம்கொடுத்தல் கூடாது. இரண்டாம் நாள் கதிரையில் அமரலாம். சாதாரண இலகு உணவை உண்ணலாம். 3 ஆம் நாள் கட்டிலில் இருந்து சிறிது தூரம் நடக்கலாம். நான்காம் நாள் வீட்டிற்குச் செல்லலாம். 2 கிழமையில் வேலைக்குச் செல்லலாம். ஆனால் பாரமான பொருட்களை 3 மாதங்கள் வரை தூக்கக் கூடாது.

கேள்வி: கருப்பையகற்றல் சத்திரசிகிச்சையின் உளவியல் தாக்கம் யாது?

பதில்: கருப்பையினை அகற்றல் என்பது பெண்மையினை அகற்றல் போன்ற உளவியல்த் தாக்கத்தினை தாய்மாருக்கு ஏற்படுத்தும். இதனால் அவர்கள் பல உள நெருக்கீடுகளுக்கு உட்படுவர். இதற்கு சிறந்த உளவளத் துணை வழங்கல் வேண்டும். மேலும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் குடும்ப விரிசல் ஏற்படலாம். அதனையும் நிவர்த்தி செய்தல் வேண்டும்.

அதிக உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவோருக்கு சத்திரசிகிச்சைக்கு முன்பான குடும்ப உளவளத்துணை வழங்கல் வேண்டும். சில வேளைகளில் சத்திரசிகிச்சையினைத் தவிர்த்து மாற்று வழிகளை நாட வேண்டும்.

# எஞ்சியுள்ள சிறுவர் சிகிச்சை விடுதியையும் புனரமைத்துத்தர பெயர்ஸ் முன்வரவேண்டும்

## குழந்தை வைத்திய நிபுணர் கோரிக்கை



(அலுவலக நிருபர்)

யாழ். போதனா வைத்திய சாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவில் மீதமாகவுள்ள விடுதியையும் பெயர்ஸ் நிறுவனம் முழுமையாகப் புனரமைத்துத்தர வேண்டுமென போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் எஸ்.கே. அருள்மொழி கோரிக்கை விடுத்துள்ளார்.

போதனா வைத்தியசாலையின் 12 ஆவது விடுதியான சிறுவர் சிகிச்சைப் பிரிவின் திறப்புவிழாவின் போதே அவர் பெயர்ஸ் நிறுவனத்தினரிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

இநநிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது -

பெயர்ஸ் நிறுவனத்தினரைப் பொறுத்த வரையில் அவர்கள் இரண்டாவது தடவையாக 'பாதுகாப்பான கரங்கள்' திட்டத்தின் கீழ் சிறுவர் சிகிச்சைப் பிரிவைப் புனரமைப்புச் செய்து தந்தமைக்கு அவர்களுக்கு நாம் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

சிறுவர் சிகிச்சைப் பிரிவில் எஞ்சியுள்ள மற்றொரு விடுதியையும், புனரமைத்துதர அவர்கள் முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பெயர்ஸ் நிறுவன குறியீட்டு முகாமையாளர் நதீ விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ். போதனா வைத்திய சாலையின் சிகிச்சைப் பிரிவு பெயர்ஸ் பாதுகாப்பு கரங்கள் செயற் திட்டத்தின்கீழ் முதன் முறையாக 2003 ஆம் ஆண்டு மறுசீரமைப்புச் செய்யப்பட்டது.

ஆயினும், பின்னர் நிலவிய யுத்த சூழல் காரணமாக கட்டடங்களுக்குப் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டன.

அமைதியான சூழல் ஏற்பட்டதன் பின்னர் நாம் இந்த சேத விபரங்களைப் பார்வையிட்டு முன்னர் மேற்கொண்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளைவிட பெருமளவு நிதி செலவு செய்து, மறு சீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய அவசியம் நலவுவதைக் கருத்திற் கொணடு எமது 'பாதுகாப்பான கரஙகள்' செயற திட்டத்தின் கீழ் இதுவரை செலவிடப்பட்ட தொகையிலும் அதிக அளவான தொகையைச் செலவிட்டு, மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (பா)

# பொருட்களின் மொத்த சில்லறை விலைகளை பட்டியல் மூலம் பார்வைக்கு வைக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் தங்களது வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைத்திருக்கக் கூடிய எல்லாப் பொருட்களினதும் ஆகக்கூடிய மொத்த அல்லது சில்லறை விலைகளை விலைப்பட்டியல்கள் மூலம் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் பார்வைக்கு வைக்கப்படவேண்டு என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர் ரூபி மர்சூக் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இவ்வாறு செயறபடாத வர்த்தகர்களுக்கு எதிராகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுக்கும். இதன்மூலம் ஆயிரம் ரூபாவிலிருந்து நூறாயிரம் ரூபா வரையிலான தண்டப் பணத்துடன் கூடிய ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# சக்கர நாற்காலியிலிருந்து சறுக்கி விழுந்து காயம்

## விடுதி நோயாளிக்கு ஏற்பட்ட அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் எக்ஸ்ரே பிரிவில் எக்ஸ்ரே எடுக்க நோயாளர் விடுதியில் இருந்து அழைத்துவரப்பட்ட வயோதிப் பெண் ஒருவர் சக்கர நாற்காலியில் ஏற முற்பட்டபோது சறுக்குண்டு வீழ்ந்ததில் பின்பக்க தலை உடைந்து படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்திய சாலையில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது-

யாழ்.போதனா வைத்திய சாலையின் 24 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சைக்கு என அனுமதிக்கப்பட்டிருந்த இலட்சுமி என்ற குறித்த வயோதிபப் பெண் சிற்றூழியரினால் எக்ஸரே எடுக்க எக்ஸ் ரேப் பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். பின்னர் அங்கு குறித்த ஊழியர் இல்லாத சமயம் குறித்த பெண் சக்கர நாற்காலியில் ஏற முற்பட்டபோது சறுக்குண்டு வீழ்ந்து பின் தலை உடைந்து படுகாயமடைந்தார்.

உனடியாக அங்கு கடமையில் இருந்த மருத்துவர்கள் குறித்த பெண்ணின் இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்ததாகவும் தெரிய வந்துள்ளது. (பா)

# நூலகத்தை இயங்க வைக்குமாறு கல்விச் சமூகம் கோரிக்கை விடுப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் கரைச்சிப் பிரதேச சபையால் நடத்தப்பட்டு வந்த பொது நூலகம் புனரமைக்கபபட்டும் இதுவரை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனக் கல்விச் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது.

கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இப்பொது நூலகம் புனரமைக்கப்பட்ட போதிலும் அதனைத் திறக்காது இருப்பதால் பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்விமான்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் குறிப்பாக கல்வி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாது சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப்பொது நூலகத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு கரைச்சிப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்விச் சமூகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (45)

# வடமராட்சி விஜயம்

(வடமராட்சி)

கொழும்பிலிருந்து வருகை தந்த நீதிச் சேவையின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் வடமராட்சிக்கு விஜயம் மேற் கொண்டுள்ளது.

இக்குழுவினர் வடமராட்சியில் முன்னர் யுத்தத் தினால் பாதிக் கப்பட்டுச் சேதமடைந்து தற் போது புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நீதிமன்றக் கட்டடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர். (100)

# தற்போது பெய்துவரும் மழையால் புகையிலைச் செய்கையாளர் பாதிப்பு

(அச்சுவேலி)

குடாநாட்டில் பல பகுதிக ளிலும் தொடர்ச்சியாகப் பல நாட்களாகப் பெய்துவரும் கடும் மழையால் புகையிலைச் செய்கையாளர்கள் பலரும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளில் அறுவடை செய்த புகையிலைகளை உலர்த்திப் பதப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு தற்போது பெய்து வரும் மழை பெரும் இடையூறுகளை ஏற்படுததி வருவதாகவும், இதனால் ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான புகையிலை நனைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# படையினரின் திடீர் பிரசன்னம் கால்நடைகள் தப்பின, திருடர் ஓட்டம்

(கரணவாய்)

கரவெட்டி கிழக்கு தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் வயல்வெளிகளில் மேய்ந்து கொண்டிருந்த கால்நடைகளைக் களவாகப் பிடித்துக்கொண்டு சென்ற சமயம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கையால் திருடர்கள் கால்நடைகளை விட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வயல்வெளிகளில் அடிக்கடி கால்நடைகள் களவாடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளை அடுத்து கால்நடைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (18)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(30.04.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
சித்திரை 17 ஆம் நாள்.
இராகுகாலம் 8.58–10.28, சுபநேரம் 2.58 –4.28,
நட்சத்திரம் உத்தரட்டாதி மு.இ 10.07 வரை,
திதி: துவாதசி காலை 7.38 வரை
சனிப்பிரதோஷ விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணச் செலவு, நண்பர் பகை, தேக சுகம் பாதிப்பு.

**ரிஷபம்:–** வீண் கற்பனை, அந்நியர் உதவி, பண வரவு.

**மிதுனம் :–** மனக்குழப்பம், காரிய வெற்றி, பண வரவு.

**கடகம்:–** நண்பர் உதவி, பொருள் இழப்பு, மனச் சஞ்சலம்.

**சிம்மம்:–** கடின உழைப்பு, காரிய சித்தி, பண வரவு.

**கன்னி :–** தேக சுகம், பணச் செலவு, வீண் பயம்.

**துலாம் :–** காரியத் தடை, பண வரவு, அந்நியர் உதவி.


**விருச்சிகம்:–** வீண் செலவு, நண்பர் உதவி, நல்ல செய்தி.

**தனுசு:–** பண வரவு, மனக் குழப்பம், காரிய வெற்றி.

**மகரம்:–** போசனை மிகுதி, பணச் செலவு, தேக சுகம் பாதிப்பு.

**கும்பம் :–** மனச் சஞ்சலம், பொருள் இழப்பு, பண வரவு.

**மீனம்:–** தேகாரோக்கியம், பண வரவு, நண்பர் உதவி.



நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக யாழ். எயிட் நிறுவனம் முன்னெடுத்து வரும் செயற்றிட்டத்திற்கு அமைவாக வன்னியிலிருந்து வந்து பட்டப் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு யாழ்.ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெற்றபோது, கல்லூரியின் நிர்வாக இயக்குநர் திருமதி எஸ்.அருள்நங்கை தலைமையுரையாற்றுவதையும், மாணவர் ஒருவருக்கு எல்.ஓ.எல்.சி.யின் வலயத் தலைவர் ரி.குமாரதாஸ் கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் காணலாம்.

# நிபுணர் குழுவின் அறிக்கை மூலம் இலாபம் தேடமுயற்சிக்கும் அரசு

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

தருஸ்மனின் அறிக்கையை வைத்துக் கொண்டு அரசாங்கம் அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் அநாவசிய பீதியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கொழும்பில் தெரிவித்தார். தருஸ்மனின் அறிக்கை தொடர்பில் பொது மக்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் முறையாக மேற்கொள்ளவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு சட்ட விரோதமானது எனில், இலங்கை வருமாறு அவர்களுக்கு எதற்காக அழைப்பு விடுக்கப்பட்டது

நிபுணர் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் டிசம்பர் எட்டாம் திகதி நியூயோர்க்கில் உள்ள இலங்கை அலுவலகத்தின், பிரதிநிதி பாலித கோஹன்ன இந்த நிபுணர் குழுவை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்ததாக அவர் சுட்டிக் காட்டினார்.



அதனைத் தொடர்ந்து டிசம்பர் 20 ஆம் திகதி அந்த அழைப்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டதாகக் கூறிய அவர், இந்த நிபுணர் குழுவை ஏற்காவிட்டால் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டமைக்கான காரணம் என்னவெனவும் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத் தரப்பினர் நிபுணர் குழுவின் அறிக்கையின் தலைப்புகளை மட்டுமே படித்து கருத்துக்களை வெளியிடுவதாகவும் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்ய தமது உறுப்பினர்களை கொன்ற புலிகள்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)


அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்யும் நோக்கில் புலிகள் தமது உறுப்பினர்களையே படுகொலை செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு சந்தர்ப்பத்தில் காயமடைந்த 50 பெண் போராளிகள் சென்ற பஸ்ஸை இலக்கு வைத்து புலிகள் தாக்குதல் நடத்தி அதனை வீடியோக் காட்சிகளாக பதிவுசெய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த இருவர் தகவல் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேநீர் அருந்திக் கொண்டிருந்த பெண் போராளிகளின் பஸ் கதவுகளை மூடி, குண்டு ஒன்றைப் பொருத்துமாறு சிரேஷ்ட புலித் தலைவர் ஒருவர் உத்தரவிட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போதும் பின்னரும் வீடியோக் காட்சிகள் பதிவு செய்யப்பட்டதுடன் புகைப்படங்களும் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் இவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தத் தவறியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மாறாக அரசாங்கத்தின் நல்லிணக்க முனைப்புக்களை குழப்பும் வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு செயற்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பணியாளர்களின் சொத்துகளுக்கு இலங்கை அரசே முழுப் பொறுப்பு

## மீண்டும் வலியுறுத்துகிறது ஐ.நா

(கொழும்பு)

**இலங்கையில் உள்ள ஐ.நா பணியாளர்கள் மற்றும் சொத்துகளைப் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கே உள்ளது என்று ஐ.நா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

மே முதலாம் திகதி ஐ.நாவின் போர்க் குற்ற அறிக்கைக்கு எதிராக இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள பேரணிகள் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே ஐ.நா பொதுச் செயலரின் பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா பணியாளர்களின் பாதுகாப்புக்கு இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் வழங்கியுள்ளது. எனினும் ஐ.நாவின் சொத்துகள், பணியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதை இலங்கை அரசுக்கு ஐ.நா மீண்டும் நினைவுபடுத்தியுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இதனிடையே, இலங்கையின் அமைச்சர்கள் இருவர் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கைக்கு எதிரான பேரணிகள் தொடர்பாக குழப்பமான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஐ.நாவின் அறிக்கைக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பேரணிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியிருந்தார்.

ஆனால் நேற்று கொழும்பில் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஐ.நாவின் அறிக்கைக்கு எதிரான பேரணிகளை நடத்தும் திட்டம் ஏதும் அரசாங்கத்துக்குக் கிடையாது என்று கூறியுள்ளார்.

# இந்திய அரசின் ஐம்பதாயிரம் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படாமை குறித்து ஐ.நா.கவலை

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்திய அரசாங்கம் வழங்குவதாக இருந்த 50, ஆயிரம் வீட்டுத் திட்டம், இதுவரையில் ஆரம்பிக்கப்படாமை தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான ஆணையகத்தின் அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி, த ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதனைத் தெரிவித்துள்ளது.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த பல குடும்பங்கள், இன்னும் அவர்களின் சொந்த இடங்களுக்குச் செல்லாதிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்படுவதாக இருந்த வீடுகள், இதுவரையில் வழங்கப்படாமை, மிகவும் கவலை அளிப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க ரஷ்யா உதவிகளை வழங்கவேண்டும்

## மனோகணேசன் கோரிக்கை



(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு ரஷ்யா உதவிகளை வழங்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ரஷ்யா, இலங்கைக்கு உதவ முடியும் என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் பலம் பொருந்திய நாடு என்ற ரீதியில் ரஷ்யா காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும்.

நாட்டில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் பற்றி உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

எனவே பிரச்சினைகளற்ற, அமைதியான நாடாக இலங்கை மாற்றமடைய வேண்டும்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் ரஷ்யா காலம் கடந்தே ஆர்வம் காட்டியது.

இதற்காக சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச அழுத்தத்தின் காரணமாக கடல்மார்க்கமாக புலிகளின் செயற்பாடு

## அமைச்சர் மைத்திரிபால கூறுகிறார்



(கொழும்பு)

புலிகளின் தாக்கம் கடல்மார்க்கமாக சர்வதேச அழுத்தங்களின் மூலம் செயற்பட ஆரம்பித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வருட உலக தொழிலாளர் தினத்தன்று தொழிலாளர்கள் அனைவரும் தருஸ்மன் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொழில்புரியும் தொழிலாளர்கள் தமது உரிமைகள் குறித்து குரல் எழுப்பும் இத்தினத்தில், நாட்டிற்கு எதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டிற்காக இத்தினத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டை தோல்வியடையச் செய்தால், எதிர்காலத்தில் நாட்டிற்கு எதிராக எழும் எந்தவொரு அழுத்தத்தையும் தோல்வியடையச் செய்ய இந்தத் தொழிலாளர் தினமே சிறந்ததென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை அணியில் ஆட்ட நிர்ணய சதி



(கொழும்பு)

இலங்கை கிரிக்கட் அணியில் 1992 ஆம் ஆண்டிலிருந்தே ஆட்ட நிர்ணய சதி நடந்து வருவதாக அந்த அணியின் முன்னாள் தலைவர் ஹசன் திலகரத்ன பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் ஏன் 4 வீரர்கள் திடீரென மாற்றப்பட்டனர். ஆட்ட நிர்ணய சதியை நாம் இப்போது நிறுத்தா விட்டால், பாகிஸ்தானின் கதி தான் இலங்கைக்கும் ஏற்படும். மேட்ச் பிக்ஸிங்கில் ஈடுபட்டு வருவோரின் பெயர் விவரங்களை விரைவிலேயே வெளியிடுவேன்.

இந்த மோசடி இன்று, நேற்றுத் தொடங்கவில்லை. நீண்டகாலமாகவே உள்ள பிரச்சினை இது. 1992ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆட்ட நிர்ணய சதி நடக்கிறது என்பதை உறுதியாகவே சொல்வேன். நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி பிக்ஸ் செய்யப்பட்டது என்று நான் சொல்லவில்லை. ஆனால், அந்தப் போட்டியில் 4 வீரர்களை ஏன் கடைசி நேரத்தில் மாற்றினார்கள் என்று மக்கள் கேள்வி கேட்கிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் பதில் சொல்லித் தான் ஆக வேண்டும்.

மெண்டிசை ஏன் மாற்றினார்கள், ஓட்டங்களே எடுக்காத கபுகேந்திராவை ஏன் சேர்த்தார்கள். மேட்ச் பிக்சிங் இந்த நாட்டின் கிரிக்கட்டில் சகஜமாகிவிட்டது என்கிறேன். இது இப்போது புற்றுநோய் மாதிரி பரவிக் கொண்டிருக்கிறது. இதை வெளியில் சொல்ல பலர், பல முறை முயன்றனர். ஆனால், அவர்களுக்கும் பணம் தந்து வாயை அடைத்துவிட்டனர்.

எனது இந்தப் பேட்டியை அந்த ஆட்ட நிர்ணய சதிக் கும்பலும் படிக்கும். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். விரைவிலேயே, உங்கள் பெயர் விவரங்களையும் வெளியில் சொல்வேன். இந்த மோசடியை இப்போதாவது, பொறுப்பில் உள்ளவர்கள் தலையிட்டு அடுத்த சில ஆண்டுகளிலாவது முறியடிக்க வேண்டும்.

ஊழலும், அரசியலும் நிறைந்த இலங்கை கிரிக்கட் சபை இதைச் செய்யத் தவறினால், பாகிஸ்தான் அணிக்கு ஏற்பட்ட நிலைமை தான் இலங்கைக்கும் ஏற்படும் என்றார் ஹசன் திலகரத்ன. 2003 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை 10 போட்டிகளுக்கு இவர் தலைவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை அணி ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டதாக முன்னாள் வீரர் ஹசன் திலகரட்ண தெரிவித்த கருத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மறுத்துள்ளார். எந்தவொரு வீரரும் ஆட்ட நிர்ணயச் சதியில் இதுவரை ஈடுபடவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.**

# கால்பந்தாட்டப் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

வத்திராயன் மத்தி விளையாட்டுக் கழகம், வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 9 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.


இப்போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதில் ஒரு நாளில் 4 போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

காலையில் 2 போட்டியும், மாலையில் 2 போட்டியும் என நடைபெறவுள்ளது. அத்துடன் இப்போட்டியில் 28 கழகங்கள் பங்குபற்றுவதாக வத்திராயன் மத்தி விளையாட்டுக்கழகத் தலைவர் தெரிவித்துள்ளார். (38)

# விளையாட்டு விழா

கரணவாய் வடக்கு நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் விளையாட்டு விழா எதிர்வரும் ஆறாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஏனைய கழகங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டப்போட்டிகள் அன்றைய தினம் பிற்பகல் 4.00 மணிக்கும், கயிறு இழுத்தல் போட்டி இரவு 7.00 மணிக்கும் நடைபெறவுள்ளதுடன், கழக வீரர்களுக்கான கால்பந்தாட்டம் மற்றும் தடகளப் போட்டிகளும் இடம்பெறவுள்ளது. (100)

# ஐ.சி.சி.யின் தரப்படுத்தல் முறை திருப்தி அளிக்கவில்லையாம்!



(சென் லூசியா)

தற்போதுள்ள ஐ.சி.சி., தரப்படுத்தல் முறை திருப்தி அளிக்கவில்லை. ஒவ்வொரு அணிக்கும் எப்படித் தரப்படுத்தல் புள்ளிகள் வழங்கப்படுகிறது எனப் புரியவில்லை என பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அந்நிய மண்ணில் விளையாடச் செல்லும் அணிகள் தொடரைக் கைப்பற்றுவது எளிதான காரியமல்ல. ஒருவேளை தொடரைக் கைப்பற்றிவிட்டால், தொடரை நடத்தாத அணிக்கு அதிக புள்ளிகள் வழங்க வேண்டும். ஆனால் தற்போதுள்ள தரப்படுத்தல் முறையில், அப்படியல்ல.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான இரண்டு போட்டியிலும் வெற்றி கண்ட எங்கள் அணியின் தரப்படுத்தலில் மாற்றம் ஏற்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும் தரப்படுத்தல் குறித்து அதிகம் சிந்திக்காமல், தொடரை முழுமையாகக் கைப்பற்ற வீரர்கள் தயாராகி வருகின்றனர். இத்தொடரில் இளம் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கிறது. இளம் வீரர்கள் மீது அதிக அளவில் எதிர்பார்ப்பு இல்லை. ஏனெனில் ஒரே நாளில் இளம் வீரர்கள் பெரிய அளவில் சாதித்து விட முடியாது. ஒவ்வொரு போட்டியிலும் இளம் வீரர்களின் செயற்பாட்டில் நல்ல முன்னேற்றம் காண்பது மகிழ்ச்சியான விடயம். இதனைத் தக்கவைத்துக் கொள்ளும் பட்சத்தில், சிறந்த வீரராக வலம் வரலாம் என்றார்.

# விளம்பரக் கட்டணத்தை அதிகரித்த வீரர்கள்

(புதுடில்லி)

கிரிக்கெட் வீரர்கள் விளம்பரம் மூலம் கோடிக்கணக்கான பணம் சம்பாதிப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. அதிலும் புகழ்பெற்ற வீரர்கள் கோடி கோடியாய் விளம்பரம் மூலம் பெறுகிறார்கள்.

டோனி தலைமையிலான இந்திய அணி சமீபத்தில் உலக கிண்ணத்தைக் கைப்பற்றியது. 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றதால் வீரர்கள் புகழின் உச்சத்துக்குச் சென்றுவிட்டனர்.

இதன் காரணமாக அவர்கள் தங்களது விளம்பர வருமானத்தையும் உயர்த்திக் கேட்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. உலகக் கிண்ணத்துக்கு முன்னர் டோனி ஒரு விளம்பரத்துக்கு ரூ.5 கோடி முதல் ரூ.6 கோடி வரை ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

உலகக் கிண்ண வெற்றியால் டோனி தற்போது ரூ.8 கோடி முதல் ரூ.10 கோடி வரை கேட்கிறார்.



டெண்டுல்கர் இதே தொகையை கேட்கிறார். முன்னர் அவர் ரூ.4 கோடி முதல் ரூ.5 கோடி வரை வாங்கி வந்தார்.

உலகக் கிண்ணத் தொடர்நாயகன் விருதைப் பெற்ற யுவராஜ்சிங் ஒரு விளம்பரத்துக்கு ரூ.5 கோடியும் (முன்பு ரூ2 1/2 கோடி), சேவாக் ரூ.3 கோடி முதல் ரூ.4 கோடி வரையும் (முன்னர் ரூ.2 கோடி) கேட்கிறார்கள்.

# வீரர்கள் கையெழுத்திட்ட துடுப்பு மட்டை பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கையளிப்பு



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிர்வாகிகள், பிரதமர் மன்மோகன் சிங்கை கடந்த வியாழக்கிழமை சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களின் கையெழுத்திட்ட துடுப்பு ஒன்றையும் பிரதமருக்கு வழங்கினர். கிரிக்கெட் சபைத தலைவர் சாங்க் மனோகர், செயலாளர் சீனிவாசன், துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா ஆகியோர் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்தபோது துடுப்பை வழங்கினர். பிரதமருடனான இந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமானது. உலகக் கிண்ண அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களின் கையெழுத்திட்ட துடுப்பை அவருக்குப் பரிசாக வழங்கினோம் என்று ராஜீவ் சுக்லா தெரிவித்தார்.

இந்தியாவில் கிரிக்கெட் மட்டுமின்றி மற்ற விளையாட்டுப் போட்டிகளையும் மேம்படுத்த நிதியுதவி அளிக்கத் தயாராக உள்ளதாகவும் கிரிக்கெட் சபை நிர்வாகிகள், பிரதமரிடம் தெரிவித்துள்ளனர். உலகக் கிண்ணப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டத்தைக் காண வந்த மன்மோகன் சிங்குக்கு இந்தச் சந்திப்பின் போது கிரிக்கெட் சபை நிர்வாகிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். சென்னையில் மே 28ஆம் திகதி நடைபெறும் ஐ.பி.எல். போட்டியின் இறுதி ஆட்டத்தைக் காண வருமாறு மன்மோகன் சிங்குக்கு கிரிக்கெட் சபை நிர்வாகிகள் அழைப்புவிடுத்தனர்.

# தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான்



(பர்படோஸ்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றிக் கொண்டது.

மேற்கிந்தியத்தீவுகளின் பர்படோஸ் மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதன் மூலமே ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நேற்று முன்தினம் பர்படோஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, 43.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல். எம். பி. சிமென்ஸ் 51, டி.எம். பிராவோ 47, சாமுவேல்ஸ் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வஹாப் றியாஸ், சயிட் அஜ்மல் ஆகியோர் தலா மூன்று, மொகமட் ஹபீஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 40.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் மிஸ்பா உல்-ஹக் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் உமர் அக்மல் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ராம்போல் நான்கு, பிசோ மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயககான மிஸ்பா உல்-ஹக் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம், இரண்டு போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில், 3-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

# ஆண், பெண் சதுரங்க அணிகளை தெரிவு செய்வதற்கான போட்டி




யாழ். பல்கலைக்கழக சதுரங்க ஆண், பெண் அணிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டி எதிர்வரும் ஏழாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உடற்கல்வி அலகின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளுக்கான ஒழுங்குத் தெரிவு ஒவ்வொரு போட்டிக்கும் மேற்குறிப்பிட்ட திகதி நேரங்களில் நேரடியாகச் சமூகமளிக்கும் பயிற்றுநர்களைக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

போட்டிகள் தொடர்பாக குறிப்பிட்ட நேரத்திற்கு 15 நிமிடம் முன்பாக சமூகமளித்து பங்குபற்றுவதனை உறுதி செய்ய வேண்டும்.

மேலதிக விபரங்களை உடற்கல்வி அலகுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாமென உடற்கல்வி அலகின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# ஒருவாரமாக வீசுகின்ற சூறாவளியால் அமெரிக்காவில் 300 பேர் உயிரிழப்பு



(பர்மிங்காம்)

அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் கடந்த ஒரு வாரமாக கடுமையான சூறாவளி வீசி வருகிறது. இதனால், அலபாமா, அர்கன்காஸ், கென்டுகி, மிசிசிப்பி, மிசோரி, டென்னிசீ, டெக்காஸ் உள்ளிட்ட மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. கடும் காற்று சுழன்று வீசுவதால் அங்குள்ள கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின.

சுனாமி போன்று காற்று வீசுவதால், வீதியில் சென்று கொண்டிருந்த மற்றும் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் தூக்கி வீசப்பட்டன. இதனால் அவை ஒன்றுடன் ஒன்று மோதி சிதறிக் கிடக்கின்றன. இந்தச் சூறாவளி புயலில் அலபாமா மாகாணம் தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கு மட்டும் சுமார் 162 பேர் உயிரிழந்துள்ளனர். 150 பேர் காயம் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அலபாமாவில் துஸ்காலீசியா நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு தகவல் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் தடைப்பட்டுள்ளது. குடிநீரின்றி மக்கள் தவிக்கின்றனர்.


இதேநிலைதான் சூறாவளி புயல் பாதித்த ஜோர்ஜியா, மிசிசிப்பி மாகாணங்களிலும் உள்ளது. புயல் மழைக்கு இதுவரை 300 பேர் பலியாகி உள்ளனர். இன்னும் தொடர்ந்து புயல் வீசுவதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரும் அபாயம் உள்ளது. இதற்கிடையே, புயல் பாதித்த அலபாமா, ஆர்கன் சாஸ் கென்டுகி, மிசிசிப்பி, மிசோரி, டென்னிசீ, ஒகலகோமா ஆகிய 6 மாகாணங்களில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகளில் தேசிய பாதுகாப்புப் படையினரை ஈடுபட வரும்படி அம்மாகாண ஆளுநர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கிடையே, புயல் பாதித்த மாகாணங்களில் மீட்பு நடவடிக்கையை துரிதப்படுத்தும்படி ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து அங்கு மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே விர்ஜீனியா, மேரிலாண்ட் அட்லாண்டிக் உள்ளிட்ட 21 கடற்கரை மாகாணங்களிலும் தட்பவெப்பநிலை மோசமாக உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே, அங்கு முன்எச்சரிகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மீண்டும் ஏவுகணைச் சோதனை

(இஸ்லாமாபாத்)



அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லக்கூடிய ஹட்ஃப்- VIII ரக ஏவுகணையை பாகிஸ்தான் நேற்று பரிசோதித்துப் பார்த்தது. இந்த ஏவுகணை சுமார் 350 கிலோ மீட்டர் தூரம் வரை பறந்து செல்லக்கூடியது. எந்த இடத்தில் இந்த ஏவுகணை பரிசோதித்துப் பார்க்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படவில்லை. எனினும், சோதனை வெற்றிகரமாக இருந்ததாக பாகிஸ்தான் ராணுவம் அறிவித்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் பாகிஸ்தான் ஏவுகணைச் சோதனையை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் மக்கள் தொகை 134 கோடி

(பீஜிங்)

சீனாவின் மக்கள் தொகை கடந்த 2010 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 134 கோடியாக உயர்ந்தது.

2000 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு எடுக்கப்பட்டபோது, சீனாவின் மக்கள் தொகை 127 கோடியாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகை 5.84 சதவீதம் உயர்ந்தது. அப்போது இருந்ததை விட 7 கோடி உயர்ந்து இப்போது 134 கோடியாகி உள்ளது.

அரசாங்கம் கடைபிடித்து வந்த ஒரு குழந்தைக் கொள்கை உள்ளிட்ட குடும்பக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளால் வருடாந்த மக்கள் தொகை வளர்ச்சி ஒரு சதவீதத்துக்கு குறைந்தது.

# பஹ்ரைன் அரசுக்கு எதிரான போராட்டம் நால்வருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

(பெய்ரூட்)

எகிப்து மற்றும் துனிசியாவைத் தொடர்ந்து வளைகுடா நாடான பஹ்ரைனில் கடந்த மார்ச் மாதம் முதல் போராட்டம் வெடித்தது.

மன்னருக்கு எதிராக பொது மக்கள் போராட்டம் நடத்தினார்கள். அதில் 30 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து சவுதி அரேபியா ராணுவத்தின் உதவியுடன் போராட்டம் ஒடுக்கப்பட்டது.

தற்போது அங்கு நிலைமை கட்டுக்குள் உள்ளது. போராட்டத்தின் போது எதிர்க்கட்சி பிரமுகர்கள், 7 பேர் வன்முறையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களைக் கொலை செய்ய முன்கூட்டியே அவர்கள் திட்டமிட்டதாகப் புகார் கூறப்பட்டது. போராட்டத்தின் போது 2 பொலிஸார் கொல்லபபட்டனர்.


அதற்கான வீடியோ ஆதாரங்கள் வெளியிடப்பட்டன. அவர்கள் மீது ராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடந்து வந்தது. வழக்கு விசாரணை முடிந்த நிலையில் நேற்றுமுன்தினம் 4 பேருக்கு மரண தண்டனை விதித்து ராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மற்றைய 3 பேரின் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அவர்களுக்கு ஆயுள் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

இதற்கிடையே, 4 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு பஹ்ரைனின் மனித உரிமை அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் அங்கு மீண்டும் கடுமையான போராட்டம் ஏற்படும் என எச்சரித்துள்ளது.

# சுனாமி பாதித்த புகுஷிமா அணுஉலை தண்ணீர் செலுத்தி குளிர்விக்கப்பட்டது



(புகுஷிமா)

கடந்த மாதம் ஜப்பானில் ஆழிப்பேரலை, நிலநடுக்கம் தாக்கியது. இதில் ஜப்பான் நிலைகுலைந்து போனது. இதில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், மேலும் சுனாமி, நிலநடுக்கம் காரணமாக ஜப்பானில் உள்ள புகுஷிமா அணு உலைகள் பெரும் பாதிப்பை சந்தித்தன.

இதில் அணு உலைகளை குளிர்விக்கும் குழாய்கள் வெடித்ததால் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் கதிர் வீச்சு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜப்பான் அணுஉலை பாதுகாப்பு அமைப்பு கதிர்வீச்சை கட்டுப்படுத்தவும், அதனைச் சரி செய்யவும் மும்முரமாக இறங்கியது.

இதற்கு ஜப்பான் மேற்கு நாடுகளின் உதவியை நாடியது. இந்நிலையில் அணு உலைக்கு குளிர்விக்கும் குழாயை சரி செய்து தற்பொழுது அணு உலையைக் குளிர்விக்க தொன் கணக்கான தண்ணீரை குளிர்விக்கும் குழாய் மூலம் செலுத்தி வருகின்றது.

இதனால் புகுஷிமாவின் முதல் அணு உலை மீண்டும் வெற்றிகரமாகச் செயற்படுகின்றது என அணு உலை பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.




# லிபியாவில் கடாபியின் ஆட்சியை முடிவிற்கு கொண்டுவர வேண்டும்

## பழங்குடித் தலைவர்கள் கோரிக்கை

லிபியாவின், 61 பழங்குடியினத் தலைவர்களும் இணைந்து, கடாபியின் ஆட்சி உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என அறிவித்துள்ளனர். லிபியாவில், கடாபி மற்றும் நேட்டோ ஆதரவுள்ள எதிர்த் தரப்புக்கு இடையிலான போர், ஒரு முடிவுக்கு வராமல் இழுத்தடித்துக் கொண்டே இருக்கிறது. இதனால், அந்நாட்டின் அப்பாவி மக்கள், எந்நேரமும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், லிபியா முழுவதிலுமான, 61 பழங் குடியினத் தலைவர்களும், பிரான்ஸ் எழுத்தாளர் பெர்னார்ட் ஹென்றி லெவியும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், ஆபத்துக்கள், சவாலகள், சர்வாதிகார ஆட்சி என, இத்தனை பிரச்னைகளுக்கு மத்தியிலும் நாங்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம். சுதந்திர, ஜனநாயக லிபியாவையே நாங்களும் விரும்புகிறோம். கடாபியின் ஆட்சி உடனடியாக முடிவுக்குக்கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், மிஸ்ரா நகரின் மையப் பகுதியில் முகாமிட்டிருந்த கடாபிப் படைகள் மீது, நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில், 37 போர் வாகனங்கள் சேதமடைந்தன. இதனால் கடாபிப் படைகள் நகரின் மையப் பகுதியை விட்டு வெளியேறி விட்டதாக, எதிர்த்தரப்பு கூறியுள்ளது.

# விளைச்சல் பெருமளவில் குறைந்ததால் வடகொரியாவில் உணவுத் தட்டுப்பாடு

## எச்சரிக்கிறது அமெரிக்க நிவாரணக்குழு

(வொஷிங்டன்)

வட கொரியாவில் உணவுத் தட்டுப்பாடு விரைவில் ஏற்படும் என்று அமெரிக்க நிவாரணக் குழு தகவல் வெளியிட்டுள்ளது.

அங்குள்ள உணவுக் கையிருப்பைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது ஜூன் மாதத்தில் பற்றாக்குறை ஏற்படலாம் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் விளைச்சல் வெகுவாகக் குறைந்ததால் தட்டுப்பாடு தவிர்க்க முடியாததாகிவிட்டதாக அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.


சர்வதேச உதவி கிடைக்கும் எனபதால் நிலைமையை பெரிதுபடுத்துவதாக சில அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் வட கொரியாவுக்கு கடந்த பெப்ரவரி மாதம் சென்ற தூதுக் குழுவினர், அங்கு பெய்த கடும் பனிப் பொழிவு காரணமாக விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டதாகத் தெரிவிததனர்.

ஏற்கெனவே அங்குள்ள மக்கள் புல், இலை, தழை உள்ளிட்டவற்றை சாப்பிடத் தொடங்கி விட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஜூன் மாதத்தில் நிச்சயம் நாடு கடும் உணவுப் பற்றாக் குறையில் சிக்கும் என்று கிறிஸ்தவ தொண்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் கென் ஐசக் தெரிவித்துள்ளார். சில அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் இந்த ஆண்டு அங்கு பட்டினியால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று ஐசக் மேலும் தெரிவித்தார்.

# ஒரு இலட்சத்து 90 ஆயிரம் கோடி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் இழப்பு

## பொதுக்கணக்கு குழு அறிக்கையில் தகவல்



(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தி கொண்டிருந்த அதே நேரத்தில், நாடாளுமன்ற பொதுக்கணக்கு குழுவும் தனியாக விசாரணை நடத்தியது.

அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த 21 எம்.பி.க்கள் கொண்ட இந்தக் குழுவில் பாரதீய ஜனதா மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி தலைவராகச் செயற்பட்டு வந்தார்.

அறிக்கையில் பிரதமர், மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு இருந்தன.

இதனால் குழுவில் இடம்பெற்று இருந்த காங்கிரஸ்-தி.மு.க. உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்தனர். அறிக்கை இரகசியமாக வெளியானதற்கு முரளி மனோகர் ஜோஷி தான் காரணம் என்று குற்றம் சாட்டினர். நேற்றுமுன்தினம் பொதுக கணக்கு குழுக் கூட்டம் நடந்தபோது காங்கிரஸ்-தி.மு.க. உறுப்பினர்கள் முரளி மனோகர் ஜோஷியிடம் இதுபற்றிக் கேட்டு வாக்குவாதம் செய்தனர். அவரைத் தலைவர் பதவியில் இருந்து விலகும்படி வற்புறுத்தினார்கள்.

இதனால் கோபம் அடைந்த முரளி மனோகர் ஜோஷி கூட்டத்தை ஒத்திவைப்பதாகக் கூறிவிட்டு வெளியேறினார். உடனே காங்கிரஸ்- தி.மு.க., சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் உறுப்பினர்கள் 11 பேர் காங்கிரஸ் உறுப்பினர் சைபுதீன் ஜோசைப் பொதுக் கணக்கு தலைவராகத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து கூட்டத்தை நடத்தினர். அதில் பொதுக்கணக்கு குழு அறிக்கையை நிராகரிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றி பொதுக்கணக்கு குழு அறிக்கை செல்லாதது என்று அறிவித்தனர்.

இதற்கிடையே பொதுக் கணக்கு குழு அறிக்கையில் என்னென்ன விவரங்கள் இருந்தன என்பது பற்றி மேலும் பல தகவல்கள் வெளியாகி உள்ளன. அதில, ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ரூ.1 லட்சத்து 90 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டு இருபபதாகக் கூறப்பட்டுள்ளது. மத்திய பொதுத தணிக்கை குழு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டு இருந்ததாகக் கூறி இருநதது. ஆனால் பொதுக்கணக்கு குழு அதை விடக் கூடுதலாக ரூ.14 ஆயிரம் கோடி அதிக இழப்பு ஏற்பட்டு இருப்பதாகக் கூறி இருக்கிறது.

# கலைஞருடன் வடிவேலு சந்திப்பு



(சென்னை)

தி.மு.க தலைவர் கலைஞரை, நடிகர் வடிவேலு நேற்று சந்தித்துப் பேசினார். இச்சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வடிவேலு,

தி.மு.க கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. கருத்துக்கணிப்புகளை விட தி.மு.க கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெறும் என்றார்.

# அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் இல்லை

## தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

(புதுடில்லி)

அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு இல்லை என, தலைமைத் தேர்தல் ஆணையர் குரேஷி தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கத் தேர்தல் பிரச்சாரத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கறுப்புப் பணத்தை பயன்படுத்துவதாக, அம்மாநில வீட்டு வசதித்துறை அமைச்சர் குற்றம் சாட்டியிருந்தார். இதுகுறித்து அவர் தேர்தல் ஆணையத்திடமும் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய குரேஷி, அமைச்சர் கௌதம் கொடுத்துள்ள புகாருக்குத் தகுந்த ஆதாரம் இல்லை என்றார்.

தவறு செய்யும் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்யும் உரிமை தேர்தல் ஆணையத்துக்கு இல்லை. அந்த உரிமையை வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தேர்தல் ஆணையம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்றார்.

# செயற்கைக் கோள் அனுப்பியது படம்


(புதுடில்லி)

ஆந்திர மாநிலம் சிறிஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து கடந்த 20ஆம் திகதி அன்று ஹரிசோர்ஸ்சாட்-2 என்ற செயற்கைகோள் அனுப்பப்பட்டது. ஏற்கனவே, விண்ணில் சுற்றி வந்த ரிசோர்ஸ்சாட்-1 ஆயுட்காலம் முடிந்ததால் இந்த செயற்கைகோளை விஞ்ஞானிகள் அனுப்பினர்.

பி.எஸ்.எல்.வி - சி16 ரொக்கெட் மூலமாக இந்தச் செயற்கைக் கோள் ஏவப்பட்டது. இத்துடன் ஹயூத் சாட் மற்றும் சிங்கப்பூர் பல்கலைக்கழகம் தயாரித்த எக்ஸ்-சாட் ஆகிய இரண்டு சிறிய ரக செயற்கைக்கோள்களும் விண்ணில் ஏவப்பட்டன.

வெற்றிகரமாகச் சென்ற மூன்று கோள்களும் திட்டமிட்டபடி பூமி சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், ஹரிசோர்ஸ்சாட்-2 செயற்கைக்கோளில் இருந்து முதல் செயற்கைக்கோள் படம் வந்து சேர்ந்துள்ளது. இதன் மூலமாக, அதன் செயற்பாடுகள் திருப்திகரமான முறையில் நடைபெறத் தொடங்கி இருப்பது தெரிய வநதுள்ளது.




# தனக்குப்பின் யார் வர வேண்டுமென சாயிபாபா உயில் எழுதிவைக்கவில்லை

## அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவிப்பு

(புட்டபர்த்தி)

எங்களுக்குத் தெரிந்தவரை பாபாவின் உயில் எதுவும் இல்லை. தனக்குப்பின் யார் வரவேண்டும் என்பது அவரது மனதில் இருந்ததா என்பதும் தெரியவில்லை என என ஸ்ரீ சத்ய சாயி மத்திய அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

நிர்வாகக் குழு மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் சார்பில் இந்திய தொழில துறை கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் வேணு சீனிவாசன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகையில், நிர்வாகிகளிடையே கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. அறக்கட்டளைக்குப் புதிய தலைவர் விரைவில் தேர்ந்தெடுக்கப்படுவார். அறக்கட்டளை நிர்வாகக் குழு அடுத்த வாரம் கூடுகிறது. அப்போது தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெறும் வாய்ப்புள்ளது.

எங்களுக்குத் தெரிந்தவரை பாபாவின் உயில் எதுவும் இல்லை. தனக்குப்பின் யார் வரவேண்டும் என்பது அவரது மனதில் இருந்ததா என்பதும் தெரியவில்லை. அறக்கட்டளை நடவடிக்கைகளில் குறுக்கிடமாட்டோம் என மத்திய அரசும், ஆந்திர அரசும் உறுதியளித்துள்ளது.


அறக்கட்டளைச் சொத்துக்களின் மதிப்பை ஊடகங்கள் மிகைப்படுத்திக் கூறுகிறது. அறக்கட்டளைச் சொத்துகள் குறிப்பிட்ட நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுபவை.



அறக்கட்டளைக்குச் சொந்தமான ஒவ்வொரு துண்டு நிலமும் அறக்கட்டளை நோக்கங்களுக்காக மட்டுமே. அவை விற்பனை செய்வதற்கோ, வர்த்தக ரீதியாக பலன் அடைவதற்கோ இல்லை என சீனிவாசன் தெரிவித்தார்.

# உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையாவிடின் இந்தியா பொருளாதார வளர்ச்சி அடையும்

(சிக்காகோ)



மொத்த உள்நாட்டு உற்பத்தி 10-11 சதவீதம் இருக்குமாறு பார்த்துக்கொண்டால் 2020 இற்குள் இந்தியாவைப் பொருளாதார வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றலாம் என முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தெரிவித்தார்.

2020இற்கு இன்னும் 9 ஆண்டுகள் உள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியை 10-11 சதவீதம் இருக்குமாறு பார்த்துக் கொண்டால் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தலாம் என சிக்காகோவில் உள்ள இந்திய தூதரகத்தில் இந்திய தொழிலதிபர்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் கூட்டத்தில் கலாம் குறிப்பிட்டார.


இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துவரும் மக்கள்தொகையை ஏற்றுக் கொள்ளும் என அவர் கூறினார். இந்தியா-பாகிஸ்தான் உறவு குறித்துப் பேசிய கலாம், இந்தியாவும் பாகிஸ்தானும் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகப் பணியாற்றும் என்று நம்பிக்கையுள்ளது என்றார்.

ஐரோப்பா அமைதிக்காக 100 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடியது. பின்னர் 28 உறுப்பினர்களுடன் ஐரோப்பிய யூனியன் அமைக்கப்பட்டது. நமது தெற்கு ஆசிய நாடுகளால் ஏன் அது முடியாது என கலாம் கேள்வி எழுப்பினார். எனினும் நாட்டின் வளர்சசிக்கு ஊழல் இல்லாத இந்தியா அவசியம் என அவர் கூறினார்.

# உடலை வைப்பதற்கான பேழைக்கு முன்னரே உத்தரவு வழங்கவில்லை

## பாபா அறக்கட்டளை நிர்வாகம் விளக்கமளிப்பு

(புட்டபர்த்தி)



சத்ய சாயிபாபா இறுதிச் சடங்குகளுக்கு முன்னதாகவே அவரது உடலை வைப்பதற்கான பேழையை வாங்குவதற்கு நாங்கள் ஒருபோதும் ஓடர் செய்யவில்லை என சத்ய சாயி அறக்கட்டளை விளக்கம் அளித்துள்ளது.

சாயிபாபா ஏப்ரல் 24 ஆம் திகதி உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டாலும், ஏப்ரல் 4 ஆம் திகதியே பேழைக்கு ஓடர் செய்யப்பட்டதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகளை அறக்கட்டளை நிர்வாகம் மறுத்துள்ளது.

பாபாவின் பக்தர் ஒருவர்தான் பேழைக்கான ஏற்பாடு செய்தார். அது பாபா மறைவுக்குப் பின்னரே பிரசாந்தி நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டது என சாயி அறக்கட்டளை உறுப்பினர் வேணு சீனுவாசன் தெரிவித்தார்.

நாங்கள் எந்தப் பேழைக்கும் ஓடர் கொடுக்கவில்லை. பக்தர் ஒருவரால் அந்தப் பேழை அனுப்பப்பட்டது. பாபாவின் மறைவுக்குப் பின்னரே அது வந்தது என அவர் கூறினார்.

# வடக்கிலுள்ள விவசாயிகளுக்கு மத்திய வங்கியால் கடனுதவி

(கொழும்பு)

வட மாகாணத்திலுள்ள 21ஆயிரம் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பிரபோதினி திட்டத்தின் கீழ் 433 மில்லியன் ரூபா கடனுதவி வழங்கியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்தது.

இந்தத் திட்டம் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களில் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகின்றது.

குறித்த பகுதியிலிருந்து உதவி தேவையானவர்கள் என 30ஆயிரத்து 978 குடும்பங்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். இவர்களில் 10ஆயிரத்து 218பேருக்கு வங்கிச் செயற்பாடுகள் மற்றும் கடன், வங்கி நடைமுறைகள் குறித்த பயிற்சி மூலம் வங்கி முறைமைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தர்ம தீரசிங்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் பங்குபற்றும் பெண்களின் பிரதிநிதிகள், மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

இதேவேளை, குறித்த குழுவினர் இத்திட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களை பகிர்வதற்காக திஸ்ஸ மஹாராம பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

கடன் வசதிகள் தேவைப்படும் நேரத்தில் தாமதங்களின்றி உடனடியாக அவற்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறித்த குழுவினரிடம் உறுதியளித்தார்.

# அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு பரீட்சார்த்த கொள்கலன் கப்பல் வருகை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்கில் அவற்றினைப் பரீட்சிக்கும் முகமாக பாரிய கொள்கலன் கப்பலொன்று நேற்று முன்தினம் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட wang hai 502 எனும் கொள்கலன் கப்பலே இவ்வாறு மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 269 மீற்றர் நீளமான இக்கப்பல் 2850 கொள்கலன்களை ஏற்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில நாட்களாக மாகம்புர துறைமுகத்திற்கு கப்பல்கள் வரமுடியாத நிலையில் அத்துறைமுகம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியால் கூறப்பட்டு வந்த பிரசாரங்கள் இதன்



மூலம் பொய்ப்பிக்கப்பட்டுள்ளதாக துறை முகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் பரீட்சித்தல் பணிகளுக்காக வருகை தந்த wang hai 502 எனும் கப்பலைப் பார்வையிடச் சென்றபோதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

# நெல்லைக் களஞ்சியப்படுத்த புதிய முறையொன்று அறிமுகம்

(கொழும்பு)

பெரும்போக, சிறுபோக அறுவடையின் பின்னர் நெல்லைக் களஞ்சியப்படுத்தும் வகையில் புதிய முறையொன்று கையாளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படிநெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்காக கொக்கூன் என்படும் புதிய முறைமையைக் கையாள்வதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தக் களஞ்சியங்கள் தற்காலிகமாக அமைக்கப்படுகின்றவை என அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொக்கூன் நெல் களஞ்சியங்கள் இஸ்ரேலில் தயாரிக்கப்படுகின்றன.

ஏற்கனவே இதில் ஒரு களஞ்சியம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சார்த்த நடவடிக்கையாக இந்தக் களஞ்சியத்தை பொலநறுவையில் ஸ்தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான பணிகள் அடுத்த வாரம் முன்னெடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துச் செலவை கட்டுப்படுத்தும் வகையில் தேவையான அளவில் இந்தக் கஞ்சியத்தை அமைக்க முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கையானது இந்தியாவில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும்

## அமைச்சர் அழகப்பெரும ஆரூடம்



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் தருஷ்மன் அறிக்கை வெளியீடானது இந்திய நாட்டில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் அந்நாட்டின் அபிமானத்தை சீர்குலைக்கும் வகையிலும் அமைந்துள்ளது. பிராந்தியத்திலேயே ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தும் வகையில் இந்த அறிக்கை உள்ளது. எனவே இது தொடர்பில் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,**

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் தருஷ்மன் அறிக்கை வெளியீட்டை நாம் மிகவும் ஆழமாகப் பார்க்கவேண்டியுள்ளது. அதாவது இதனை வெறுமனே விட்டுவிட முடியாது. மேலும் இந்த அறிக்கையைக் காரணம் காட்டி அரசாங்கம் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுடன் முரண்பட்டுக்கொள்ள விரும்பவில்லை.

காரணம், இந்த அறிக்கையானது இலங்கை எனும் நாட்டுக்கே சவால் விட்டுள்ளது. அது தொடர்பிலேயே நாங்கள் சிந்திக்கவேண்டியுள்ளது. மேலும் பிராந்தியத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடான இந்திய நாட்டில,அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் அந்நாட்டின் அபிமானத்தை சீர் குலைக்கும் வகையிலும் இந்த தருஷ்மன் அறிக்கை அமைந்துள்ளது.

எனவே இதனை வெறுமனே விட்டுவிட முடியாது. இந்தியா என்பது எம்முடன் உயர்ந்த உறவைக் கொண்டுள்ள தொரு பெரிய ஜனநாயக நாடாகும். அந்த நாட்டின் அபிமானத்துக்கு சவால் விடுக்கும் வகையில் இந்த அறிக்கை அமைந்துள்ளது. இதன் மூலம் ஒரு உள்நோக்கம் மற்றும் சதி விடயம் தெளிவாகின்றது. அதாவது இந்திய நாட்டையும் இந்த அறிக்கை குறி வைத்துள்ளது என்று கூறலாம்.

பலாலிவீதி திருநெல்வேலி சந்திக்கு அண்மையாக சம்பத் வங்கியின் கிளை நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் வங்கியின் கிளையை வங்கிப் பணிப்பாளர் டிபால் சூரியாராட்சி நாடாவை வெட்டித் திறந்து வைப்பதனையும். முதலாவது வாடிக்கையாளரிடமிருந்து பணவைப்பினைப் பெற்றுக் கொள்வதனையும் காணலாம்.

(படம் - கார்த்திகேயன்)





# நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக கவனம் எதுவும் செலுத்தப்படமாட்டாது

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நிபுணர் குழு அறிக்கை வாசிக்கப்படும் எனினும், அதன் உள்ளடக்கங்கள் பற்றி தீவிரமாக ஆராயப்பட மாட்டாது என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர் சீ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழு அறிக்கையின் ஒரு சில விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப் போவதில்லை என ஆணைக் குழு தீர்மானித்துள்ளதாக அதன் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் கவனம் செலுத்தப்பட்டு வரும் பல விடயங்கள் பற்றி ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


எனவே, நிபுணர் குழு அறிக்கையின் நிலைப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை அறிந்து கொள்வது பயனுள்ளதாக அமையும்.

எவ்வாறெனினும்,நிபுணர் குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு செயற்படாது.

குறிப்பிட்ட சில விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட மாட்டாது எனவும் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை இன்னமும் முழுமையாக வாசிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழர்கள் சார்பாக பேசுவதற்கு எனக்கு உரிமையும், அதிகாரமும் உண்டு

## - அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பேட்டி



ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையினை எழுதியிருப்பவர்கள் ஐ.நா.வின் எந்தவொரு அமைப்புக்கும் உரித்தானவர்களல்லர் என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏசியன் ரிபியூன் என்ற இணையத்தளத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, இவர்கள் இலங்கையையும் இலங்கையின் படை வீரர்களினதும் நற்பெயரைக் களங்கப்படுத்தும் நோக்கில் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட எழுத்தாளர்கள்.

ஐ.நா. செயலாளர் நாயகம் தொடர்ந்தும் தமது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக சுய இலாப நோக்கத்துடன் சில நாடுகளினதும் அமைப்புக்களினதும் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் விதத்தில் இலங்கை ஜனாதிபதிக்கும், இராணுவ தலைவர்களுக்கும் அவதூறு ஏற்படும் வகையில் இந்த எழுத்தாளர்களை நியமித்துள்ளார்.

எமது மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நான் 15 வருடங்களாக இலங்கைப் படையினருக்கு எதிராக ஆயுதமேந்தி மோதல்களை முன்னெடுத்தவன். பின்னர் இந்நாட்டின் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதில் எவ்வித உண்மையும் இல்லை. இலங்கைத் தமிழர்கள் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு உரிமையும் அதிகாரமும் உண்டு. இந்த தமிழர்களே என்னை அவர்களது பிரதிநிதியாக 1994 ஆம் ஆண்டு முதல் தெரிவு செய்து வருகின்றனர்.

புலித்தலைவர் பிரபாகரனின் தவறான அரசியலினால் இந்த நாடு ஆயிரக்கணக்கான அப்பாவி சிவிலியன்களை இழந்துள்ளது. உண்மையில் கடந்த 30 வருடங்களாக வடக்கு கிழக்கில் கொல்லப்பட்ட 70 ஆயிரம் அப்பாவி மக்களின் மரணங்களுக்கு பிரபாகரனே பொறுப்பாளியாவார்.

தோல்வியுற்ற தலைவர் பிரபாகரனும், அவருடன் சேர்ந்த ஏனையோரும் துடைத்தெறியப்பட்ட பின்னரும், மேற்குலகில் புலிகளின் ஒரு பகுதியினர் இன்னமும் செயற்பட்டுக் கொண்டிக்கின்றனர்.

இவர்கள் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. செயலகத்திற்கு உள்ளும் புறமும் எப்போதும் நோட்டம் விட்டுக் கொண்டிருப்பதாகவும் நியூயோர்க்கில் வசிக்கும் சிலர் ஐ.நா. செயலகத்திற்கு மிகவும் நெருக்கமான அதிகாரிகள் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் வெளிப்படையாக பழகுவதன் மூலமும் இலங்கை அரசாங்கத்தினை குற்றஞ் சுமத்தியிருக்கும் அறிக்கையினை வெளியிடச் செய்வதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும், எமக்கு அங்கிருந்து தகவல்கள் கிடைத்த வண்ணமுள்ளன.துரதிஷ்டவசமாக அவர்கள் நினைத்ததை நடத்தியுள்ளார்கள். இதற்காக ஆயிரக்கணக்கான டொலர்கள் கைமாறியிருப்பதாக நாம் அறிந்தோம்.புலிகளுடன் இறுதி மோதல் இடம் பெற்ற காலப் பகுதியான 2008 செப்டம்பர் இலிருந்து மே 2009 வரையான காலப் பகுதிக்குள்ளேயே இந்த தருஸ்மன் அறிக்கையை எழுதிய குழுவினர்,ஐ.நா. செயலாளரின் சுய விருப்பின் பேரில் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் காரணமாகத்தான் இக்காலப் பகுதியினுள் வந்துள்ளனர். மோதலின் இறுதித் தறுவாயில் புலிகளைத் தமது காலடிக்கு கொண்டு வருவதற்காக படையினர் ஈடுபட்டிருந்த வேளை புலிகள் மிகவும் துன்பகரமான மற்றும் பயங்கரமான சம்பவங்களுக்கு முகம் கொடுப்பதாகச் சித்தரித்துக் காட்டியுள்ளனர்.

அவர்கள் தமது கற்பனையில் சேவல் மற்றும் எருமை மாடுகளின் கதைகளை 196 பக்க அறிக்கையாக எழுதியுள்ளனர். நான் ஒரு தமிழ் அமைச்சர் என்ற போதிலும், பிரபாகரன் என்னைக் கொலை செய்வதற்காக 13 தடவைகளுக்கும் மேலாக தற்கொலைப் போராளிகளை என் மீது ஏவியுள்ளார். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார்கள் புலிகளினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவை குறித்த விடயங்கள் தருஸ்மன் அறிக்கையில் தவறவிடப்பட்டுள்ளமை ஏன்? பிரபாகரனினாலும் அவரது ஆட்களினாலும் நடத்தப்பட்ட கொலைகள் மற்றும் நாசகரமான சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காகவும், நிலையான அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதற்காகவும் எமது ஈ.பி.டி.பி 2005 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது.நான் ஒரு தமிழன். இலங்கைத் தமிழன். என்னை தமிழ் மக்களே வாக்களித்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்தனர். அப்படியிருக்க எவ்வித சட்ட ஆதாரமும் இல்லாமல் பொறுப்புள்ள முறையில் குறைகளைக் கொண்டதாக அமைந்திருக்கும் இந்த தருஸ்மன் அறிக்கையினை நான் நிராகரிக்கிறேன்.

இதன்போது கேள்வியொன்றுக்கு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பதிலளிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது ஏதேனும் ஒரு நாடோ அப்பாவித் தமிழர்களுக்கு நிகழ்ந்த உயிரிழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் தமது இரக்கத்தைக் காட்ட நினைத்தால் அவர்கள் இழப்புகளுக்கான நட்ட ஈடுகளை வழங்க முன்வரவேண்டும். பிரபாகரனும் அவரது ஆட்களினது ஏவப்பட்ட பயங்கரவாத யுத்தத்தினால் கடந்த 30 வருடகாலமாக எனது மக்கள் துன்புற்றிருக்கிறார்கள்.

தோல்விகளும், ஏமாற்றங்களும் நிறைந்த 60 வருடகால பயங்கரமான வரலாறுதான் இந்த தமிழர் பிரச்சினை. 1987 இல் செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு சோகக்கதை அது ஏமாற்றத்திலேயே முடிவடைந்தது. ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்த பண்டா- செல்வா ஒப்பந்தம் டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றினூடாகவும் பிரச்சினைக்கான நிலையான தீர்வினைப் பெறமுடியாமல் போனது என்றும் தெரிவித்துள்ளார்.

## அச்சமின்றி வாழும் சூழல் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது

### குடிவரவுத்திணைக்கள அதிகாரி சூலானந்த பெரேரா

(கொழும்பு)

இலங்கையில் எவருக்கும் அச்சமின்றி வாழும் சுதந்திர சூழல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு திணைக்களக் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா குறிப்பிடுகின்றார்.

பிரிட்டன் அரசாங்கத்தின் அழைப்பையேற்று லண்டன் சென்றுள்ள சூலானந்த பெரேரா, அங்கு வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

இலங்கையில் தற்போது நிலவும் சிறப்பான பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அங்கிருந்து யாரும் அகதிகளாக வேறு நாடுகளுக்குப் புலம் பெயர வேண்டியதில்லை. இலங்கையிலிருந்து யாரும் அகதிகளாகப் புலம் பெயர்ந்து வரு வார்களாக இருப்பின் அவர்கள் மோசடிப் பேர்வழிகளாகவும், அவர்களுக்குப் பின்னால் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் தொடர் புள்ளவர்களும் இருப்பார்கள் என்பதை பிரித்தானிய அரசாங் கத்துக்குத் தெளிவு படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் போலிக் கடவுச்சீட்டு மூலம் பிரிட்டனுக்குள் இலங்கையர் நுழைவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் உள்துறை அமைச்சகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்புகள் அல்லது மாணவர்களுக்கான கற்கை அனுமதி என்பன வழங்கப்படுமாயின் அதற்கான கோட்டாவை அதிகரிக்குமாறும் இலங்கை அரசாங்கம் சார்பில் பிரித்தானிய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### மேற்குலக..

ஆவணமாகவே நோக்கப்பட வேண்டு மென திவயின சுட்டிக் காட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்புக்கிளை கடந்த காலங்களைப் போன்றே தற்போதும் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது. பயங் கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமை ஓர் பிழையான செயல் என்பதே பான் கீ மூனின் நிலைப்பாடு எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டதனைத தொடர் ந்து, புலி ஆதரவு அமைப்புக்கள் மீளவும் இலங்கைக்கு எதி ரான போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதில் தீவிரம் காட்டி வருவதாக திவயின பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். பல்கலைக்..

பாரதூரமான குற்றம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படாமையே தமது போராட்டத்திற்கான பிரதான காரணம் என மாணவப் பிரதிநிதிகள் கூறியதை ஏற்றுக்கொண்டு எதிர்வரும் 06.05.2011 வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தேர்தல் நடாத்துவது என முடிவு செய்யப்பட்டது.

மாணவர்கள் தமது கோரிக்கைகளை உரிய முறையிலும் ஒழுக்க நடைமுறைகளுக்கு அமைவாகவும், பல்கலைக்கழக மாணவர் என்ற ரீதியில் சமூகத்திற்கு முன்மாதிரியான முறையிலும் முன்வைக்க வேண்டும் என்றும், அவற்றை தகுந்த முறையில் பரிசீலித்து உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும், பீடங்களின் கல்விச் செயற்பாடுகள் வழமை போல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாணவர்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஒன்றியத் தலைவரின் பல்கலைக்கழக உட்பிரவேசத்தடையை உடனே இரத்துச் செய், மாணவர் நலனில் அக்கறை இல்லாது தனது சுய இலாபங்களுக்காக செயற்படும் மாணவ ஆலோசகரின் பதவியை உடன்நீக்கு, மாணவர்களினது மட்டுமல்லாது தமிழின மாணவர் ஒன்றியத்தை உடனே மீள ஒழுங்கமை ஆகிய கோரிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முன்வைத்து, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் தமது கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


நேற்றுக்காலை பல்கலைக்கழக வளாகத்தின் பிரதான வாயிலில் ஒன்று கூடிய மாணவர்கள், மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து, பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன், துணை வேந்தர், துறைசார் தலைவர்கள், ஒழுக்காற்றுப்பிரிவினர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கை மீது...


அரசாங்கம் முன்னர் கோரி இருந்தது. இதில் அரசாங்கத்துக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் காரணமாகவே இந்த அறிக்கையைத் தாமதமாக வெளியிடுமாறு அரசாங்கத்தால் கோரப்பட்டதாக கூறப்பட்டது.

எனினும், அதனை நிராகரித்துள்ள தூதுவர், குறித்த அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக மாத்திரமே தயாரிக்கப்பட்டது.இதன் காரணமாகவே அந்த அறிக்கையைத் தாமப்படுத்துமாறு அரசாங்கம் கோரியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# நடிகர் ரஜனிக்கு மூச்சுத் திணறல்; அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

## ரசிகர்களால் மருத்துவமனை முற்றுகை



(சென்னை)

படப்பிடிப்பின்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் நடிகரான 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமாரின் 'ராணா' படத்தின் படப்பிடிப்பு நேற்று ஏ.வி.எம். ஸ்டுடியோவில் ஆரம்பமானது.

இப்படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொண்டு சில காட்சிகளில் நடித்தார். அப்போது அவருக்கு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு உண்டானது. படப்பிடிப்புக் குழுவினர் அவரை உடனடியாக மயிலாப்பூரிலுள்ள இசபெல்லா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான மருத்துவக் குழுவினர் இவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்த விடயத்தை அறிந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யுத்தப் பாதிப்புக்களுக்கு நீதி கிடைக்குமா?

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்குரிய வழிமுறைகளுக்கு சீனாவும் ரஷ்யாவும் ஒரு போதும் தடையாக இருக்கக் கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிராட் அடம்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த 25 ஆம் நாள் வெளியிடப்பட்ட ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையில் இரு தரப்பினரும் போர்க்குற்றங்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. போர் நிறைவடைந்து இரு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அதில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என அறிக்கை தெரிவித்துள்ளது.

எனவே அங்கு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீன விசாரணைகள் தேவை என அறிக்கையில் பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதனை தடுப்பதற்கு சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் முன்வரக்கூடாது.

நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு இந்த நாடுகள் ஆதரவுகளை அளிக்கவே இலங்கையில் கொள்ளப்பட்ட வன்மு தொடர்பில் ஏப்ரல் மாத காப்புச்சபையில் விவா பட்டபோது அதனை சீ ரஷ்யாவும் எதிர்த்திரு எனவே ஐ.நா.வின் நாடுகள் இந்த அறிக் பரிந்துரைகளுக்கு ஆதர வழங்கவேண்டும் என மேலும் தெரிவித்துள்ளா

# மே தின நிகழ்வுகளின் பொருட்

## 8 ஆயிரம் பொலிஸார் கடமை

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இடம்பெறவுள்ள மே தின நிகழ்வுகளுக்காக பாதுகாப்பு வழங்க 8 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸா மா அதிபரின் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு நகரில் பெறும் நிகழ்வுகளுக் ஆயிரம் பொலிஸார் சே அமர்த்தப்படுவதுடன், வர்கள் மத்திய மற்றும் மாகாணங்களில் இடம் மே தின கடமைகளுக்கா டுத்தப்படுவர் எனத் தெரி

இதேவேளை, மே தி வுகளை அமைதியான யில் கொண்டாடும்படி பிரதி பொலிஸ் மா என்.கே. இலங்கக் வேண்டுகோள் விடுத்து

# உணவு நஞ்சாகியது; 70 பேர் மயக்கம்

## மன்னார் விடுதியில் விபரீதம்

(மன்னார்)

மன்னார் பிரதேசத்திலுள்ள ஆண்கள் விடுதி ஒன்றில் உணவு நஞ்சாகியதால் 70 பேர் மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்று மாலை அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டு பின்னர் சாதாரண பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மன்னார் பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆஸாத எம்.ஹனீபா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மற்றும் மன்னார் பொது சுகாதார அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

# தனியார்துறை ஓய்வூதியம்; நேற்று வழக்கு விசாரணை

(கொழும்பு)

தொழிலாளர்களது ஓய்வூதிய கொடுப்பனவு நிதியம் தொடர்பான சட்ட மூலம் அரசியல் சீர் திருத்தத்திற்கு எதிரானதென தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள் ளப்பட்டது.

பிரதம நீதியரசர் அசோக்கா டி சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட நீதிஅரசர் குழாம் இந்த விசாரணைகளை எதிர்வரும் 2ஆம் திகதி வரை ஒத்திவைக்க தீர்மானித்தது.

தனியார் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி வங்கியின் தொழிற் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு நீதிமன்றத் தீர் இங்கு யாருக்கும் வேண்டா

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



(கொழும்பு)

வெளிநாட்டு நீதிமன்றமொன் றில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கோ அல்லது வேறும் எவருக்கோ தண்டனை விதிக்க அனுமதிக்கப்படமாட்டாது என மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா மட்டுமன்றி தமக்குக்கூட உள்நாட்டு சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்படுவதில் தவறில்லை. எனினும், வெளிநாட்டு நீதிமன்ற மொன்றில் தண்டனை விதிக்கப் படுவதனை அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போருடன் தொடர்புடைய எவரையும் சர்வதேச நீதிமன்றின் முன்னால் ஆஜர்படுத்த இடமளிக்க முடியாது. பான் கீ மூனின் நிபுணர் குழு அறி பயங்கரவாதத்திற்கு ஆதரவ ளிக்கும் வ அமையப் பெற்றுள்ளது

இவ்வாறான அறிக்கைகளின் மூலம் பயங்கரவாத அமைப்புக்களின் தன்னம் உயர்வடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியு

# ஜனாதிபதி தலைமையில் 400 பேருக்கு புலமைப்பரிசில்



(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் அதிக புள்ளிகளைப் பெற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையின் அங்கத்தவர்களின் புதல்வர்கள், புதல்வியர்கள் 5 ஆயிரம் பேர் புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளனர். இவர்களில் 400 பேர் தெரிவு செய்யப்பட்டு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

# தமிழர்களின்...

யுத்தத்துக்குப்பிந்திய நிலையில் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகள் அபிவிருத்தியை நோக்கிய திசையில் மீள்நிர்மாணம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அதேசமயம், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை நிலை நிறுத்திக்கொள்ளும் முயற்சியாகவே மேற்படி அரசியல் பேச்சுக்கள் அரசுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய இப்பேச்சுவார்த்தையின்போது, தமிழ் பேசும் மக்கள் முகம் கொடுத்து வரும் நாளாந்தப் பிரச்சினைகள் குறித்தும் தமிழ் மக்களது அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான நிரந்தரமானதும் கௌரவமானதும், ஆரோக்கியமானதுமான தீர்வு குறித்தும் விரிவாகவும் ஆரோக்கியமான வழிமுறையிலும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஈழ மக்கள் ஜனந கட்சியின் சார்பில் கட்சியின் செயலாளர் நாய அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அ தலைமையில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட ளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதி வருமான முருகேசு சந்திரகுமார், சட்டத்தரண ரங்கன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவ பிரத்தியேகச் செயலாளர் கே. தயானந்தா, சரின் இணைப்பதிகாரி கே.ராஜ்குமார், ஈ.பி.டி. நிர்வாகச் செயலாளர் அ.இராசமாணிக்கம் ஆ கலந்து கொண்டனர்.

அரச தரப்பில் அமைச்சர்களான நிமல் சிறி டி. சில்வா, ஜி.எல்.பீரிஸ். நாடாளுமன்ற உறுப் களான ராஜீவ விஜேசிங்க, சஜின் த வாஸ் குண தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச நெறிமுறை...

நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் துரித கதியில் மேற்கொள்ள முனைப்புக் காட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை புள்ளி விபரங்கள் உள்ளிட்ட தரவுகளை அரசாங்கம் வெளியிட வேண்டுமென தெரிவித்துள்ளது. பிரச்சினைகளுக்கான மூல காரணிகளை கண்டறிந்து, அதற்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பிலான தமது அமைப்பின் நிலைப்பாட்டை வெளியிடும் நோக்கில் தேசிய சமாதானப் பேரவை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

# மாறிவரும் சமகால அரசியல்...

நேற்றுமதியம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக சமகால அரசியல் சூழ்நிலை குறித்தும் போர்க்குற்றம் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் தருஸ்மனின் அறிக்கை குறித்தும் மற்றும் அதன் உள்ளடக்கம், உண்மைத் தன்மைகள் என்பன குறித்தும் எத்தகைய தீர்மானத்தை எடுப்பதால் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கு நன்மை பயக்கும் என்பது உட்பட பல்வேறு விடயங்களும் பரஸ்பரம் கலந்துரையாடப் பட்டது. இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது, இந்திய அரசினால் முன்னெடுக்கப்படும் ஐம்பதினாயிரம் வீடமைப்புத் திட்டத்தை துரிதப்படுத்தி, இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களின் வாழ்வியலை மேலும் அர்த்தமுள்ளதாக்குவது மற்றும் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வினை விரைவுபடுத்துவது குறித் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்ப யிலான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை அமுல்படுத்துவதோடு, அதற்கு மேலதிக அ ரங்கள் வழங்குவது குறித்தும், ஏற்கனவே இந் இலங்கை அரசுகளால் இணக்கம் காணப்பட் ஈ.பி.டி.பி.யினால் நீண்டகாலமாக வலியுறுத்தப் வருவதுமான இத்திட்டத்தை முன்னோக்கி நக வதை துரிதப்படுத்துவது போன்ற விடயங்க விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா அ ளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அ ளுக்கும் இடையிலான இச்சந்திப்பானது மிக ஆரோக்கியமான ஒன்றாகவும் தமிழ்பேசும் ம ளுக்கு நன்மை பயக்கும் ஒன்றாகவும் அமைந் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்